# இரத்த



# நரம்புகள்

கவிதைத் தொகுதி





கலாபூஷணம்

மாறன் - யூ. ஸெயின்

வெளியீடு

பிரதேச செயலக கலாசார அதிகார சபை

சம்மாந்துறை

அன்பளிப்பு

# இரத்த நரம்புகள்

## கவிதைத் தொகுதி

கலாபூஷணம்

**மாறன் - யூ. ஸெயின்**

**வெளியீடு**

பிரதேச செயலக கலாசார அதிகாரசபை

சம்மாந்துறை

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | இரத்த நரம்புகள் |
| வகை | கவிதைகள் |
| நூலாசிரியர் | கலாபூஷணம் மாறன் யூ. ஸெயின் |
| வெளியீடு | பிரதேச செயலக கலாசார அதிகாரசபை சம்மாந்துறை |
| பக்கங்கள் | 119 |
| பிரதிகள் | 500 |
| நூல் உரிமை | நூல் ஆசிரியருக்கு |
| வடிவமைப்பு முக அட்டை | எழுத்தாளர் இஸட்.எம். றிஸ்வி |
| கணினிப் பணி | கலைஞர் எம்.ஐ.எம். முஸம்மில்<br>கலைஞர் ஏ.எச். ஹலீம் BA |
| அச்சகம் | எஸ்.டீ.ஸி. அச்சகம் சம்மாந்துறை |
| முதல் பதிப்பு | 2016 |

| | |
|---|---|
| விலை | 285/- |
| ISBN | 987-955-7374-00-0 |

# சமர்ப்பணம்



என்னை ஒரு கவிஞனாக - கலைஞனாக
எழுத்தாளனாக... இச்சமூகம் காண்பதற்கு

கருவாக இலங்கியஎன் தந்தை - தாயினரான,
வைத்தியர் உதுமாலெவ்வை - பாத்திமா தம்பதியர்,
கண்ணும் கருத்துமாய்எனை ஊக்குவித்த
என் மனைவி சித்தி நபீஸா
கல்விக்கும் அறிவுக்கும் ஒளிகூட்டிய ஆசான்கள்,

படைப்புக்களை அவ்வப்போது பிரசுரம் பண்ணிய
பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரிய திலகங்கள்...
பாசம்மிகு என்இனிய நேசங்கள் எல்லீர்க்கும்,

தாங்கிச் சுமந்துஎனைப் பேணிநிதம் காக்கும்
தாய்மண் பதியினுக்கும்
தாய்மொழி தமிழுக்கும்

சாற்றும் இந்நூல்
சமர்ப்பணம்

**மாறன் - யூ. ஸெயின்**

# கவிதைகள் பூத்த
# இரத்த நரம்புகள்

## கவிஞர் பற்றி...

சம்மாந்துறை மண்ணைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டுவாழும் கவிஞரும் எழுத்தாளரும் கலைஞரும் கல்விமானுமாகிய கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் அவர்கள் கல்வி கற்கின்ற இளமைக் காலத்தில் இருந்தே கட்டுரைகள் கவிதைகள் நாடகங்கள் எழுதுவதில் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவராக இலங்கினார்.

இவர் எழுதி இயக்கி அரங்கேற்றிய நாடகங்களில் கலைஞர் எம்.எம். இஸ்மாயில், கலைஞர் எஸ். வேல்முருகு, எழுத்தாளர் ஏ.எல்.எம். யாஸீன், பாவலர் பஸீல் காரியப்பர், கவிஞர் வீ. ஆனந்தன், கலைஞர் ஏ.ஏ. கரீம், கலாபூஷணம் எஸ்.எச்.எம். முஸ்தபா... இன்னோரன்ன கலைஞர்களும், படைப்பாளர்களும் பாத்திரங்கள் ஏற்று நடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் கலை இலக்கியம் கல்வி சமூகம்... தொடர்பான மேம்பாட்டுப்பணிகளை இலட்சியங்களாகக் கொண்டு 1956ஆம் ஆண்டு ஸ்தாபிக்கிப்பட்ட 'கலாபிவிருத்திக் கழகம்' எனும் அமைப்பின் ஸ்தாபகர்களில் ஒருவராக இலங்கிய இவர் பொதுச் செயலாளராகவும் இயங்கிக் காத்திரமான பணிகளை ஆற்றி இருந்தார்.

இன்றைய - எதிர்கால சந்ததியினரின் வாழ்வியல் மேம்பாடுகள் தொடர்பான உணர்வுகளும் சிந்தனைகளும்தான் இவரது கவிதை சிறுகதை கட்டுரை நாடகம்... இன்னோரன்ன படைப்புக்களுக்குக் காரணிகளாக இலங்கின.

இவரது காத்திரமான கவிதைகளும், கட்டுரைகளும், சிறுகதைகளும் சுதந்திரன், தினகரன், வீரகேசரி, தினக்குரல், செய்தி, தினக்கதிர், கலைமுரசு... இன்னோரன்ன பத்திரிகைகளிலும், கலைச்செல்வி, மலர், மணிக்குரல்... இன்னோரன்ன சஞ்சிகைகளிலும், முற்றத்து மல்லிகை, கவிதைச் செல்வம்... இன்னோரன்ன தொகுப்புக்களிலும் மற்றும் பல சிறப்பு மலர்களிலும் பிரசுரமாகி வெளிவந்து இலங்கின.

இந்தவிதமான இவரது வெளிப்படுத்தல்கள் ஒருபக்கம் இலங்கினாலும் இன்றைய - எதிர்கால சந்ததியினர் மத்தியில் பிரஸ்தாப கலை இலக்கிய கல்வித்துறைகளில் விழிப்புணர்வுகளை மேம்படுத்தும் முயற்சிப் பணிகளிலும் அவ்வப்போது காத்திரமாக இயங்குகிறார். இந்த முயற்சிகளை மேற்கொண்டு பயணிப்பதற்காக இதற்கான அமைப்புக்களையும் ஸ்தாபித்தும் இருந்தார்.

தேசிய கலைக் குன்றம், சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம், தேசிய கலை இலக்கியத் தேனகம்... இன்னோரன்ன அமைப்புக்களின் ஸ்தாபிதங்களுக்குக் காரணிகளாக இருந்ததோடு இன்று இவற்றின் தலைவராகவும் இலங்குகிறார்.

இத்தொடு பிரதேச செயலக அதிகாரத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி கலை இலக்கிய கலாசாரப் பணிகளை மேற்கொண்டுவரும் 'பிரதேச கலை இலக்கிய கலாசாரப் பேரவை', 'பிரதேச செயலக கலாசார அதிகாரசபை' ஆகியவற்றின் துணைத் தலைவராகவும் இயங்கிப் பணிகளை மேற்கொண்டு இலங்குகிறார்.

இவரது தலைமையில் சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம் அனுசரணையில் இயங்கும் 'தேசிய கலை இலக்கிய தேனகம்' அமைப்பின் மூலம் தனது சொந்த ஆக்கத்தில் உருவான இரண்டு தமிழ் இலக்கிய நூல்களையும், மற்றும் எழுத்தாளர் - கவிஞர்களின் ஆறு நூல்களையும் வெளியீடு செய்தும் இருக்கிறார். இன்னும் சில நூல்களை விரைவில் வெளியீடு செய்யவும் இருக்கிறார்.

இவர் கல்வி கற்பித்தல் - நிருவாத்துறைகளில் முதலாம் தர அதிபராகப் பணிகள் ஆற்றி ஓய்வு பெற்றிருக்கும் நிலையிலும் கலை - இலக்கிய - கல்விப் பணிகள் தொடர்பான சேவைகளில் இருந்தும் ஓய்வுகள் பெற்றதாக இல்லை.

இத்தன்மைத்தான இவரது கலை இலக்கியப் பணிகளின் சாதனைகளைத் தொட்டு தேசிய 'கலாபூஷணம் விருது', மாகாண 'முதலமைச்சர்விருது' , மாவட்ட 'சாகித்திய விருது', 'பிரதேச சாகித்திய கலாசார விருது' ஆகிய விருதுகளை அரச திணைக்களங்கள் வழங்கிக் கௌரவித்தும் இருந்தன.

இந்தவகையில் என்றும் இப்பிரதேச மக்களின் இதயங்களில் இழைந்து கொண்டிரும் கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

அவர்களது பிரதேச செயலக கலாசார அதிகார சபையால் வெளியிடப்படும் 'இரத்த நரம்புகள்' எனும் கவிதைத் தொகுதியில் இவர் பற்றிய சுருக்கமான தகவல்களை இன்றைய - எதிர்கால சந்ததியினரின் தோடல்களுக்குப் பயன்பட எழுதக் கிடைத்தமை எனக்கு மிகவும் ஆறுதலாக இருக்கிறது.

இந்த 'இரத்த நரம்புகள்' கவிதைத் தொகுதியினை முத்தாரமாகக் கொண்டு எம்பிரதேச எழுத்தாளர்கள் - கவிஞர்களதும் தொகுப்புக்கள் - நூல்களையும் 'பிரதேச செயலக கலாசார அதிகாரசபை' அவ்வப்போது வெளியீடு செய்துவர ஆவன செய்யின் சாலவும் பயனுடையதாகவும் இருக்கும்.

**கவிஞர் மன்சூர் ஏ. காதிர்** BA
பல்கலைகழக முன்னாள் பதிவாளர்,
சம்மாந்துறை.

# அணிந்துரை

சம்மாந்துறை நான் பிறந்த ஊர். எனக்கு வாழ்க்கையைக் கற்றுத்தந்த ஊர். கவிதை, கதை எல்லாவற்றையுமே இந்த மண்ணிலேதான் நான் படித்தேன். என் முதாதையர்கள் இஸ்மாலெவ்வைப் புலவர் முதல் ஆனந்தன் வரை எல்லோரதும் பெயரையும் கேட்டு ரசித்திருக்கிறேன். அவர்களது படைப்புக்களை எண்ணி மகிழ்ந்திருக்கின்றேன். இந்த நினைவுகளுக்குள் இப்போதும் எங்களோடு இருக்கின்ற ஸெயின் அவர்களைப் பற்றி எழுதக் கிடைத்தமை மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது.

யூ.எல். ஸெயின் எங்கள் வீட்டுக்காரர். எனது தந்தையாரின் நல்ல நண்பர். யூ.எம். முஸ்தபா என்ற கலை ஆளுமையின் தம்பி. கவிஞர், கதை - கட்டுரை எழுதுபவர், நாடகங்கள், வில்லுப்பாட்டுகள் எழுதி இயக்கும் நல்ல ஒரு கலைஞர் அவர். அவரை எங்கள் வீட்டில் அடிக்கடி சந்திப்போம். அவர் கதைகளையெல்லாம் என் காதால் கேட்டிருக்கிறேன். முஸ்தபா சேர், ஸெயின் சேர் கதைக்கும்போதே ஓர் ஆளுமை தெரியும். இந்த ஆளுமையை எல்லாம் *அவர்களுக்கு* வழங்கியது 'கலாபிவிருத்திக் கழகம்' தான் எனப் பின்னர் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

யூ.எல். ஸெயின் என்ற பெயருக்கு முன்னால் 'மாறன்' என்ற ஓர் அடை சேர்ந்திருக்கும். மாறன் என்பதற்கு தனித்துவமான ஒரு அடையாளம் உண்டு. இது சங்கத் தமிழில் இருந்து வருகிறது. சோழப் பேரரசில் தொடர்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து பிணைந்திருக்கிறது. அது இங்கு கலாபிவிருத்திக் கழகத்தின் முக்கியஸ்தர் யூ.எல். ஸெயினுக்கும் அடையாக வந்திருக்கிறது. இதிலிருந்து ஸெயினின் தமிழின், தமிழ்ப் பேரரசின், திராவிட அரசியலின் பற்று நன்கு தெரியும். அதனைத்தான் 'மாறன்' என்பதை அடையாகக் கொண்டிருக்கிறார்.

சம்மாந்துறையில் ஒரு காலத்தின் எழுத்தாளர்கள் எல்லாரும் 'கலாபிவிருத்திக் கழகம்' என்ற பண்ணையில் வளர்ந்தவர்கள்தான். கலாபிவிருத்திக் கழகம் தென்னிந்தியாவின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடர்ச்சி. அந்தக் கொள்கைகளை இவர்கள் வரிந்து கட்டிக் கொண்டவர்கள். கலைக்காக வாழ்ந்தவர்கள் கலையை வளர்த்தவர்கள். இன்றும்

சம்மாந்துறையின் கலை இலக்கிய வளர்ச்சியின் தொடர்ச்சியைத் தாங்கிக் கொண்டிருப்பவர்கள்.

இன்னும் நாங்கள் இயக்க ரீதியாகச் செயற்படுகிறோமென்றால் அது கலாபிவிருத்திக் கழகத்தின் எச்ச சொச்சங்களால்தான் நடக்கிறது. ஆனந்தன் என்ற ஓர் இயக்க சக்தி எங்களைவிட்டு மறைந்ததற்குப் பின்னர் நாங்கள் அரைகுறையானோம். இன்றும் இருக்கிற மாறன் யூ. ஸெயின் போன்றவர்கள் மறைந்துவிட்டால் எங்கள் எதிர்காலம் என்னவாவது என்ற ஏக்கம் எங்களை விட்டுப் போவதில்லை. மாறன் நீண்ட காலம் வாழ வேண்டும். அவர் இந்த மண்ணில் பலவற்றைச் சாதித்திருக்கிறார். அப்போதிருந்தே அவ்வப்போது கவிதைகள் எழுதியவர். இப்போது நிறைய எழுதியிருக்கிறார். ஆனால், அவருடைய முதல்தொகுதி இதுவாகத்தான் இருக்குமென்று நினைக்கின்றேன். இவ்வளவு காலம் எடுத்திருக்கின்றது.

இந்தக் குறைபாடு கலாபிவிருத்திக் கழகத்தாருக்கு உள்ளதுதான். அவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுடைய குரு ஈழமேகத்தின் 'உரை மலரைக்' கொண்டு வந்திருக்கிறார்கள். அப்துல் றசீதுக்கு ஒரு 'அறவழிக்கீதம்' பாடியிருக்கிறார்கள். ஆனால், பஸீல் காரியப்பரை அவர்கள் வெளிக்கொண்டு வரவில்லை. முஸ்தபாவை, எம்.எம். இஸ்மாயிலை, கரீமை, இஸ்மாலெவ்வையை, றாசிக்கை, யாசீனை எவரையும் அவர்கள் ஆவணப்படுத்தவில்லை. எனது தந்தையார் அப்துல்லாவின் மரணத்தில் அவர்கள் ஒன்று சேர்ந்து நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் அப்துல்லாவாகப் பார்த்துவிட்டு ஓய்ந்துவிட்டார்கள். எப்பவோ வெளிக்கொண்டு வந்திருக்க வேண்டிய மாறன் யூ. ஸெயினையும் அவர்கள் கொண்டு வரவில்லை. ஸெயினுடைய கவிதைகள் இப்போதாவது 'இரத்த நரம்பு' களாக முறுக்கேறி வெளியே வருவது மிக்க மகிழ்ச்சி தருகின்றது.

தி.மு.க.விற்குப் பின்னாலிருந்த மொழி, அறம், போராட்டம், சமத்துவம், இலக்கியம், கலை, அரசியல் எல்லாமே கலாபிவிருத்திக் கழகத்திற்கும் உண்டு. இந்த எழுச்சிக்குப் பின்னால் இருக்கிற வறுமையும் அவர்களுக்குள்ளே இருந்தது. அதனால்தான் போதும் அந்தக் கலைப்படைப்புக்கள் ஆவணமாக வெளியே வருவதற்கு நீண்ட காலம் எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வப்போது கலைக்காகவும் அரசியலுக்காகவும் தாய்மொழிக்காகவும் அவர்கள் போராட்டம் நடத்தி இருக்கிறார்கள் - நடித்துக் காட்டியிருக்கிறார்கள் - நியாயம்

தேடியிருக்கிறார்கள் அரசியல் செய்திருக்கிறார்கள். ஆனால் அவற்றை ஆவணப்படுத்தி வெளிக்கொண்டு வருவதில் தாமதித்திருக்கிறார்கள்.

நான் முன்னே சொன்னதுபோல - தி.மு.க.வின் குரல்போல - கலாபிவிருத்திக் கழகத்தின் குரலாக இந்த 'இரத்த நரம்புகள்' மாறன் யூ. ஸெயினினால் புடைத்தெழும்பி இருக்கின்றன. அவருடைய இத்தொகுதியின் முதற் கவிதை 'பொங்கிப் படைத்தவை போதும்' என்பதுதான். தொழிலாளர்களுக்காக அவர் உரத்துக்குரல் எழுப்பியிருக்கிறார். முதலாளித்துவத்தை மிகத் தன்னடக்கத்துடன் கண்டித்து இருக்கிறார்.

எங்கள் வேதனைகள் என்றால்
ஏழனம் உங்களுக்கு
உங்கள் வாழ்வினுக்காய் நாங்கள்
உழைத்துப் போட்டதெல்லாம்
எங்கள் தாழ்வினுக்கே என்று
எண்ணிக் குமுறுகிறோம்
நீங்கள் பூட்டிவிட்ட செக்கின்
நிலமை புரியாமல்!

'இங்கண் ஒளிர்கின்ற சர்வ
இயற்கை... இறைமைகளும்
சிங்கம் எங்களுக்கே...' என்று
சீண்டியே எங்களது
பங்கை சுரண்டி எங்கள் வாழ்வைப்
பாழக்கி உங்களுக்குப்
பொங்கிப் படைத்தவைகள் இனிப்
போதும் போதுமினி!

அவருடைய பெரும்பாலான கவிதைகள் முதலாளித்துவத்தின் கொடுமைகளை நச்சரிப்பதாகவும், ஏழைகளின் உணர்வுகளை வேட்கைகளை வெளிக்கொண்டு வருவதாகவுமே அமைந்திருக்கின்றன. சமூகத்தின் போலிகளை உரித்துக்காட்டி தன் உணர்வுகளைக் கொண்டு கவிதைகளாக அவர் பலவற்றை ஆக்கியிருக்கின்றார். பூட்டைத் திற!, ஏன் இந்த உளவாரம்?, உழைத்துச் சிதைகிறது...! இருளில் நான்...!, புல்லறுக்க யார் இருக்கார்?, எண்ணி வாழ்கிறாள்... முதலான கவிதை எல்லாம் இத்தன்மைகளில் உருவான வெவ்வேறு ரகமான கவிதைகளே.

'எண்ணி வாழ்கிறாள்...' என்பதில் தன் உழைப்பால் தான் தேடிப்பெற்றவற்றால் மனம் நிறைந்து வாழும் பெண்... மெசின் உலகத்திற்கு மாறியிருக்கிற இந்த விவசாய உலகில் கதிர் பொறுக்கி வாழும் அந்தக் கன்னியை நாம் காணவே மாட்டோம். ஆனால் அதனால் மனம் நிறைந்து வாழும் மங்கையை ஸெயின் கொண்டுவந்திருக்கிறார். இது அந்தக்காலத்தின் மிக முக்கியமான படம். இந்தப் படத்தினை இனிவரும் காலங்களில் நம்மால் கொண்டுவர ஒரு கவிஞரும் இல்லை அந்தக் காட்சியும் இல்லை.

கையில் ஒருகம்பும் - சிறு
கயிறும் சணல் சாக்கும்
பொய்யே அறியாத - இளம்
பூக்கும் மொட்டு அவள்
..............................
..............................
கால்கள் பின்னலிட பூங்
கைகள் மருங்கசைய
வேல்கள் போன்றஅவள் - கரு
விழிகள் சுழலஒரு
..............................
..............................
கால்கள் கடுக்க அந்த வயல்
காப்புள் இறங்கிட்டாள்

பொய்யே அறியாத இளம் கன்னியையும், வயல் காப்புள் இறங்கும் அந்தச் சொல்லையும் தேடி நாம் நீண்ட தூரம் செல்லவேண்டியிருக்கிறது. இப்படி மாறனின் கவிதைகளில் அழகையும் அந்தக் காலத்தின் சொல்லையும் நாம் கண்டு பேசி - ரசிக்கவும், ஆராயவும் வேண்டியுள்ளது.

கோபால கிருஷ்ண பாராதியார் காலத்திலிருந்து பெண்ணின் அவலத்தினைப் பாடும் நம் நவீன கவிஞர்களின் வரலாற்றில் மாறன் யூ. ஸெயினும் இருக்கின்றார். 'எனை வருத்தல் இது முறையோ!', 'பரதேசி', 'சர்மிளா விடும் சவால்', 'என் வேர்கள் ஓடுதற்கு'... என பெண்களின் குரலாய் நின்று பல கதைகளைச் சொல்வதற்கு அவர் தவறவில்லை. அப்போதய கவிஞர்கள் எல்லாம் தாய்மொழியைப் போற்றுவதுபோல் தமிழுக்காய் குரல்கொடுக்கும் பல கவிதைகளையும் நம் கவிஞர் ஆக்கியுள்ளார். இந்நாட்டின் அடிமைகளாகவும் மொழியால்

சிதைவுபட்டு முரண்பட்டு வாழும் நம் எதிர்காலத்திற்காகவும் குரல் எழுப்புகின்றார். இதேபோன்று கல்விக்காகவும் அவர் பல கவிதைகளை ஆக்கியுள்ளார்.

சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் போதைவஸ்து பாவனைக்கு எதிராகவும் அவர் கவிதை படைத்து 'பற்றி எரிகிறேன்' எனவும், 'கள்ளுண்ணும் பக்தர்களாகவும்' காணுகிறார். 'பற்றி எரிகிறேன்' எனும் கவிதை கடைசிவரை வஞ்சிக்கப்படும் பெண்ணாய் சித்திரிக்கப்படுவது ஒரு அழகுதான். எல்லோரும் போல காதல் மொழி பேசும் பல கவிதைகளும் இத்தொகுதியில் உள்ளன. 'இறவாது வாழ...' கனவு காணும் இக்கவிஞர் அகதிகளுக்காகவும் மனிதத்திற்காகவும் சமாதானத்திற்காகவும் உரத்துக் குரல் எழுப்பி வாழ்வில் நீதியை நிலைநாட்ட வேணவாக் கொள்கின்றார்.

இறுதியாய் ஒற்றுமையும் வாழ்வில் ஒளியும், தருமமும், அர்ப்பணிப்பும் நம் நாட்டின் கனவுகளும், நம் ஊரின் பெருமையும்... பாடி முற்றுப்பெறும் கவிஞரின் 'இரத்த நரம்புகள்' இத்தொகுதியில் முறுக்கேறியே உள்ளன. ஈழத்து தமிழ் இலக்கிய வரலாற்றில் தி.மு.க வருகையின் பின்னும் ஈழத்தின் சுதேசிய மொழி அமுலாக்கத்தின் பின்னும் எழுந்த மொழி உணர்வு, கலை உணர்வு நிரம்பிய கவிதைகளின் பிரதிநிதியாக மாறன் யூ. ஸெயினைக் காண்கிறோம். அக்காலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு கவிஞர் மாறன் யூ. ஸெயின் என்பதில் தவறிருக்காது என்றே நம்புகின்றேன்.

இன்னும் அவரிடம் எஞ்சியிருக்கிற கவிதைகளும், சிறுகதைகளும், கலைப் படைப்புக்களும் தொகுதிகளாக வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். அவர் நமது காலத்தின் நம்பிக்கைக்குரிய இயக்கு சக்தியுள்ள ஒரு ஆளுமை. அவர் சாதித்தவை அனேகம். அவை தொடரவேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

அன்புடன்,

**பேராசிரியர். றமீஸ் அப்துல்லாஹ்,** Ph.D
தலைவர், மொழித்துறை
கலை கலாசார பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

## அணிந்துரை

சம்மாந்துறை எனும் பிரதேசம் பூர்வீக காலத்தில் இருந்தே 'கிராமியக் கவிப்பாடல்கள்' தொடர்பான இலக்கியத்துறைகளில் பாரம்பரிய மிக்க பதிவுகளையும் பெருமைகளையும் பெற்ற ஒரு பிரதேசமாகும்.

இதைத் தொடர்ந்து முகிழ்ந்து - மலர்ந்த - மலர்ந்து கொண்டும் இருக்கின்ற இலக்கியம் 'கவிதை இலக்கியம்' என்றால் மிகை இல்லை.

இக்கவிதை இலக்கியங்களை அவ்வப்போது படைத்து இலங்கிய ஆசுகவி இஸ்மாலெவ்வை புலவர், கவிஞர் வைத்தியசிகா அருணாசலம், கவின்மணி, அழகுரெத்தினம், காவியனார் முகம்மது ஷெரீபு, நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி, பாவலர் பஸீல் காரியப்பர், கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ்... இன்னோரன்னவர்கள் மரணம் எய்திவிட்டனர்.

இப்போது கலாபூஷணம் மாறன் யூ ஸெயின், கலாபூஷணம் ஏ.ஸி. இஸ்மாலெவ்வை, கவிஞினி மும்தாஜ் பேகம், கலாபூஷணம் ஏ. அஸீஸ், கலாபூஷணம் பரீதா இஸ்மாயில், கவிஞர் மன்சூர் ஏ. கதிர், கலாஜோதி மசூறா ஏ. மஜீது... இன்னோரன்ன கவிதை இலக்கியம் படைக்கின்ற பல கவிஞர்கள் - கவிஞினிகள் இன்றும் தத்தமது படைக்கும் பயணங்களைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றனர்.

இந்தக் கவிஞர் திலகங்களுள் இன்னும் இலங்கிக் கொண்டிருக்கின்ற ஆளுமைமிக்க ஒரு முதிய கவிஞர்தான் கலாபூஷணம் மாறன் யூ. ஸெயின் அவர்கள்

இவர் கவிதை இலக்கியம் படைப்பதில் மட்டுமல்ல கட்டுரை, ஆக்கம், சிறுகதைஇலக்கியம், நாடகக்கலை, வில்லிசைப் பாட்டுக்கலை... என்று பல துறைகளிலும் ஆர்வமும் ஆற்றலும் மிக்கவராக இலங்குகிறார்.

இவரில் இழைகின்ற முக்கியமான முன்னோடியான ஒரு தன்மை - பிரஸ்தாப கலை இலக்கியத் துறைகளில் 'இன்றைய - எதிர்கால சந்ததியினரும் விழிப்புணர்வுகள் பெறவேண்டும்'... என்கின்ற காத்திரமான பயணத்தில் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருந்து இயங்குவதுதான்.

இதற்கு உதாரணமாக தற்போது எனது நிருவாகத்திலுள்ள பிரதேச செயலக அதிகாரத்தில் இயங்கிப் பணிகளை மேற்கொண்டு வருகின்ற 'பிரதேச செயலக கலை கலாசாரப் பேரவை' எனும் அமைப்பு 2002ஆம் ஆண்டு உதயமாவதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களில் இவரும் முக்கியமான ஒருவர் என்றால் மிகை இல்லை.

இந்தக் கலை கலாசாரப் பேரவையானது ஆண்டுதோறும் சாகித்திய கலாசாரப் போட்டிகளை நடாத்தி சாகித்திய கலாசார விழாக்களை மேற்கொண்டுவந்ததும், கலை-இலக்கிய - சமய - சமூகம் சார்ந்த சாதனையாளர்களைப் பாராட்டி விருதுகள் வழங்கிக் கௌரவித்து வந்ததும், 'பட்டறை' எனும் பெயரில் விழா சிறப்பு மலர்களை வெளியிட்டு வந்ததும் எல்லோருமே அறிந்தவர்களாகவே இருப்பர்.

இந்தக் காலக்கட்ட சூழ்நிலையில்தான் மத்திய அரசின் கலாசாரத் திணைக்களத்தின் பணிப்புரையின் நிமித்தம் 2016.03.14 ஆம் திகதி எனது தலைமையில் 'பிரதேச செயலக கலாசார அதிகாரசபை' எனும் அமைப்பு அங்குராப்பணம் செய்து வைக்கப்பட்டு இருந்தது.

இதன் முதல் பணியாக கலை-கலாசாரப் போட்டிகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன. இது தொடர்பான 'கலை கலாசார விழா' விரைவில் நடைபெறவும் இருக்கிறது.

இந்த இலட்சியப் பயணத்தில் புதிய ஓர் அத்தியாயமாக பூக்க இருக்கிறது 'இரத்த நரம்புகள்' எனும் கவிதைத் தொகுதி. இதற்கு உருத்தான கவிஞர்தான் கலாபூஷணம் மாறன் யூ. ஸெயின் அவர்கள்.

இவர் எழுதிய நூற்றுக்கணக்கான கவிதைகளில் ஐம்பது கவிதைகள் மட்டும்தான் இத்தொகுதியில் இடம்பெற்று இருக்கின்றன.

இக்கவிதைகள் உழைப்பாளர் உரிமைகள், ஒருவருக்கொருவர் உதவும் மனப்பாங்கு, இன-மத ஒற்றுமை, தேசப்பற்று... தொடர்பான ஒவ்வொருவர் வாழ்வியல்களிலும் இழைய வேண்டிய அமசங்கள் பலவும் இடம்பெற்று இருக்கின்றன. இவற்றில் வாழ்வியல் தொடர்பான தூரநோக்குகளை உணரக்கூடியதாக இருக்கின்றன.

இன்றைய - எதிர்கால சந்ததிகளின் தேடல்களுக்குப் பயன் நல்கக்கூடிய இந்தக் கவிதை இலக்கிய ஆவணத்தை உருவாக்கித்தந்த பிரஸ்தாப கவிஞர் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இப்பிரதேசத்தில் இலங்கும் மற்றும் எழுத்தாளர்கள் - கலைஞர்கள் - இலக்கியகர்த்தாக்களின் படைப்புக்களும் ஆவணங்களாக எதிர்காலங்களில் வெளிவரவேண்டும் என்பது எனது ஆதங்கமாக இருக்கிறது.

**எழுத்தாளர் ஏ. மன்சூர்**
B.Com, MA (Pub. Admin)
(SLAS -Special Grade)
(பிரதேச செயலாளர்)

தலைவர்
பிரதேச செயலக கலாசார அதிகாரசபை
சம்மாந்துறை.

## அணிந்துரை

சமகாலத்தில் ஈழத்திலிருந்து வெளிவரும் கவிதைத் தொகுப்புகள் பலவும் சலிப்பைத் தருகின்ற நிலையில் 'இரத்த நரம்புகள்' என்கிற இத்தொகுப்பு அவ்வரிசை சார்ந்ததுதான் என்ற எண்ணத்தோடு இத்தொகுப்பைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தேன். எனினும் இத்தொகுப்பை வாசித்து முடித்த பின்னர் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன். வித்தியாசமான தனித்துவமான ஒரு தொகுப்பாக இதனைக் கண்டுகொண்டேன்.

பாடுபொருள் என்ற அடிப்படையில் தொழிலாளர் நிலை, பெண்கள் நிலை, மொழிப்பற்று, தேசிய ஒற்றுமை, காதல் உணர்ச்சி, பிரதேசப்பற்று... முதலான பல்வேறு விடயங்களும் சார்ந்துள்ள கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. எனினும் இவை 'பொருள் புதிது' ஆகா. ஈழத்தில் நவீன கவிதை பிறப்பெடுத்த சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளிலிருந்து நாம் சந்திக்கின்ற விடயங்களே இவை.

அவ்வாறெனில் இத்தொகுப்பின் வித்தியாசமான - தனித்துவமான - பண்புதான் யாது என்றொரு கேள்வி எழுகின்றதல்லவா?

உண்மைதான், மேற்கூறியவாறான பேசு பொருள்களின் வெளிப்பாட்டு முறைதான் இத்தொகுப்பின் தனித்துவமான பண்பாக எனக்குப் புலப்படுகின்றது. அது 'புதிய சுவை' தருவதாக நான் உணர்கின்றேன்.

வெளிப்பாட்டு முறை என்பதைவிட வெளிப்பாட்டு முறைகள் என்பதே பொருத்தமானதாகின்றது.

சங்ககால அகத்திணைப் பாடல்கள் பாத்திரங்களின் கூற்றாக அமைந்திருப்பது போன்று இத்தொகுப்பிலுள்ள கணிசமான கவிதைகளும் காணப்படுவது பற்றி முதலில் குறிப்பிடலாம். இத்தொகுப்பிலுள்ள முதற் கவிதையே

"நாங்கள் நெடுங்காலம் உங்களை
நம்பிக் கிடந்து விட்டோம்
நீங்கள் எங்களது உயிர்
நெஞ்சின் நோவுகளைத்
தாங்கிக் கொஞ்சமேனும் தொட்டுத்

தடவிப் பார்த்ததில்லை
ஏங்கித்தவம் கிடந்தோம் உங்கள்
இதயம் திறக்குமென்று!"

என்றவாறு ஆரம்பித்து தொழிலாளர்கள் கூற்றாகவே தொடர்கின்றது.

பெண்களது அவலமும் பற்றி எழுந்துள்ள 'புல்லறுக்க யார் இருக்கார்?' என்பதும் அவ்வாறுதான்.

பன் பிடுங்கி பாய் இழைத்து
பசிபோக்க..... இதுகாலும
என்புருகப் பாடுபட்டு
இரைதேடி....... வாழ்ந்து வந்தோம்...!

என்று தொடங்கிச் செல்கின்றது.

பாத்திரங்களை அறிமுகப்படுத்தி அதன் பின்னர் அவர்களைப் பேச விடுவன, சில கவிதைகள். 'சர்மிளா விடும் சவால்' உங்களுக்குக் கேட்கிறது அல்லவா?

பாத்திரங்களைப் படர்க்கை நிலையில் நடமாட விட்டுச் செல்வன சில கவிதைகள். 'பூத்திடும் எதிர்காலம்' அத்தகையது!

பாத்திரங்களை விழித்து அவற்றுடன் உறவாடிச் செல்வன, வேறுசில. உதாரணம்: தலை நிமிர்ந்து வாழணும் என்தங்கம்மா!.

மேற்கூறிய கவிதை ஓட்டத்தினிடையே முற்றிலும் வித்தியாசமாகவுள்ளது, 'சாரதா மாமியைப் பார்த்துக்க!'.

"அண்ணே! உங்களைத்தான் கேட்கிறேன்
அன்னம்மா வின்வீடு இதுதானோ?"

"கண்ணில் பூப்போட்ட அவள் அதோ
கல்லிலே குத்திக் கிடக்கிறாள்!"

"தவறாக எனை நீங்கள் எண்ணாமல் அவள்
தாயினை ஆரென்று சொல்லுங்க?"

அவளைக் கேட்காதே தம்பி நீ
ஆறேழு வரு'மாய் அழுகிறான்''

என்றவாறு பாத்திரங்களின் உரையாடல்களாக உருவாயுள்ளது அது. மேற்கூறியவை அனைத்தும் உயர்திணைப் பாத்திரங்கள் சார்ந்தவை.

எனில் பின்வரும் கவிதை அத்தகையதன்று.

"எனக்கோ பல பேர்கள் இருக்கின்றார்... அவர்கள்
என்மேல் வைத்திருக்கும் காதலுக்கு அளவில்லை
சனங்கள் மத்தியிலும் எனைப்பிடித்துக் கொஞ்சி
சரசம் பண்ணாமல் எவரும் செல்லார்கள்''

என்று ஆரம்பிக்கும் அக்கவிதை.

"அழகையும் கெடுத்தும் எரித்தும் எனைப்போட்டு
அவர்தன் காலாலும் மிதித்துவிட்டு அயர்ந்தார்....
பழகப்போய் பட்டுத்தேறியும் பயனில்லை
பாழும் 'சிகரெட்'டாய் ஏன்தான் பிறந்தேனோ!
பற்றி எரிகின்றேன்....''

என்று முடிவுறும்போதுதான் தெரிகின்றது. அது 'சிகரெட்'டின் கூற்று என்று.

மேற்கூறியவாறான வெளிப்பாட்டுத் தனித்துவம் வித்தியாசம் காரணமாக இத்தொகுப்பிலுள்ள கணிசமான கவிதைகள் 'புதிய சுவை' பயப்பனவாகப் பூத்துள்ளன. அது மட்டுமன்று புத்துணர்ச்சி என்கின்ற நறுமணத்தையும் பரப்புகின்றன. அனைத்தையும் விட கவிஞரது அனுபவங்களை உணர்ச்சிகளை வாசகரிடத்தும் தொற்ற வைக்கின்றன் பற்ற வைக்கின்றன!

இவ்வாறான புதிய புதிய பாதைகளில் தொடர்ந்தும் கவிஞர் பயணிக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

சம்மாந்துறை இத்தொகுப்பினூடாக இன்னொரு 'முதிய' கவிஞரை இனங் காட்டியதையிட்டு மகிழ்வெய்துகின்றேன்.

பாராட்டுகளுடன்,
**பேராசிரியர் செ. யோகராசா**

## அணிந்துரை

கிழக்கிலங்கையின் புகழ்பூத்த பழம்பதிகளில் சம்மாந்துறை எனும் பதியும் ஒன்றாகும். வரலாறு கூறும் பல சான்றுகளுடன் இலக்கியங்கள் தொடர்பான சான்றுகள் ஏராளம். காலம் காலமாக பல கவிகளையும் கவிதைகளையும் கவிஞர்களையும் அன்றுமுதல் இன்றுவரை புகழ்பரப்பி வருகின்றமை அனைவருக்கும் கண்கூடான விடயமாகும்.

இந்தவகையில் எமது எழுத்தாளர்களில் கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் அவர்களுக்கு கவிதை இலக்கியத்துறையில் தனித்துவமான ஓர் இடம் இருக்கிறது. இவர் கவிதை இலக்கியத்தில் மட்டுமல்ல சிறுகதைகள் நாடகங்கள் கட்டுரைகள் படைப்பதிலும் மிகுந்த ஆற்றல்கள் உடையவர்.

இவை தொடர்பான இவரது ஆக்கங்கள் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சிறப்புமலர்களிலும் தொகுப்புக்களிலும் வெளிவந்து இருக்கின்றன. இவர் தனது ஆக்கங்களைப் படைக்கின்ற பணிகளுக்கு அப்பால் இப்பிரதேசத்தின் கலை இலக்கிய எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் ஆற்றிய - ஆற்றிவருகின்ற பணிகள் சொல்லிலடங்காதவை.

இவர் தனது இலக்கியத்துறை அர்ப்பணிப்புக்களைத் தொட்டு தேசிய - மாகாண - மாவட்ட - பிரதேச... மட்டங்களில் பல அரச விருதுகளையும் பெற்று இருக்கிறார்.

இவர் கல்வி நிருவாக அதிபர் சேவையில் முதலாம்தர அதிபராக இயங்கிப் பணிகளாற்றி இப்போது ஓய்வுபெற்றவராக இருக்கின்ற இந்த நிலையிலும் தனது இலக்கியக்கலைகள் தொடர்பான முயற்சிகளில் ஓய்வுபெற்றதாக இல்லை.

இவர் இன மத பேதமின்றி பிரதேச மக்களின் ஒருமைப்பாட்டிற்காக அயராது உழைத்து வருவதுடன் இப்பிரதேச எழுத்தாளர்கள் - கலைஞர்களையும் இவர்களது படைப்புக்கள் தொடர்பான விபரங்களையும் ஏனைய பிரதேசங்கள்வாழ் மக்களும் அறிய அயராது இன்றும் உழைத்துக் கொண்டே இருக்கிறது.

இவர் சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அனுசரணையில் இயங்கும் 'தேசிய கலை இலக்கியத் தேனகம்'

எனும் தொகுப்புக்கள் - நூல்கள் வெளியீட்டு அமைப்பின் மூலம் இப்பிரதேச எழுத்தாளர்களின் 'இனிக்கும் தமிழ் இலக்கியம்' எனும் சங்ககால பாடல்கள் சிலவற்றின் பொழிப்புரைகளை கொண்ட தொகுப்பு நூல் முதல்... 'கடையில் பூத்த கவிதைகள்' எனும் கவிதைத் தொகுதி வரை எட்டு நூரல்களை வெளியீடு செய்து இருக்கின்றார். எதிர்காலங்களில் இன்னும் பல நூல்களை வெளியீடு செய்யவும் இருக்கிறார்.

இவர் மனித - சமூக வாழ்வியலைத் தொட்டு தனித்துவமான கொள்கைகளும் முற்போக்குச் சிந்தனைகளும் உடையவர். இந்த ஆற்றல்களையும் சிந்தனைகளையும் இன்றைய - எதிர்கால சந்ததியினரின் விழிப்பிற்கும் எழுச்சிக்கும் வாழ்வியல் மேம்பாட்டிற்கும் ஏற்றவகையில் வெளிக்கொணர்வதில் இவர் வெகு சமர்த்தர்.

இவர் தான் எழுதிய நூற்றுக்கணக்கான கவிதைகளில் ஐம்பது கவிதைகளை மட்டும் கொண்ட 'இரத்த நரம்புகள்' எனும் பெயரிலான கவிதைத் தொகுதியினை வெளியிடவிருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இத்தொகுதியிலுள்ள கவிதைகளின் ஆழங்களை அலசுகின்ற போது எனது மெய் சிலிர்க்கின்றது. உழைப்பாளிகளின் தியாகங்கள், இன - மத - குல பேதங்களற்ற வாழ்வியலின் மகத்துவம், நாட்டிற்காக ஒவ்வொருவரும் செய்யவேண்டிய அர்ப்பணிப்புக்களின் அவசியம், தாய்மொழியின் தனித்துவம்... இன்னோரன்ன விடயங்களை உயரிய முறையில் தனது கவிதைகளுக்குள் விதைத்து இருக்கின்றார். தான் கூறவந்த கருத்துக்களை ஆழமாகவும் ஆணித்தரமாகவும், துணிச்சலுடன் வெளிக் கொணர்ந்துள்ளமையை இவரது கவிதைகள் மூலம் உணரக்கூடியதாக இருக்கிறது.

இவரது 'போட்டிடனும் தமிழ்பாலம்' எனும் கவிதையில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுவாழும் அனைத்து மக்களும் முரண்பாடுகளை மறந்து மொழி ரீதியாக ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதை வலியுறுத்துவதாக இருக்கிறது.

இவ்வாறு இவரது இக்கவிதைத் தொகுதியிலுள்ள கவிதைகள் எமக்குப்பல ஆதங்கங்களையும் அவசியங்களையும் உணர்த்துவதாக இருக்கின்றன.

இந்தவகையில் 'இரத்த நரம்புகள்' எனும் பெயரிலான இக்கவிதைத் தொகுதியில் அமைந்துள்ள காத்திரமான கவிதைகளைத்தந்த கவிஞரின் அரும் முயற்சியைக்கண்டு நான் வியப்படைகிறேன்.

அருமையான இவரது இலக்கியக்கலை ஆக்க முயற்சிகள் மென்மேலும் தொடரவேண்டும் - வளம்பெற வேண்டும் என்பதுதான் எனது ஆதங்கம்.

**எழுத்தாளர் கௌசல்யா கணேஸ்வரன்** BA
(கல்லூரி அதிபர்)

வீரமுனை,
சம்மாந்துறை.

# வெளியீட்டுரை

சம்மாந்துறை எனும் மண்பதி கலை இலக்கிய கலாசாரம்... தொடர்பான துறைகளில் பாரம்பரியமான விழுமிய சுவடுகளைக் கொண்ட ஒரு பிரதேசமாகும்.

இருந்தும் இத்தன்மைத்தான பதிவுகள் இன்றைய - எதிர்கால சந்ததியினரின் தேடல்களுக்குப் பயன்படக்கூடியதாக திருப்தியான வகையில் ஆவணங்களாக்கப்பட்டதாக இல்லை.

இன்னும் சொல்லப்போனால் அண்மைக்காலங்களில் வாழ்ந்து மரணம் எய்திய கவின்மணி அழகுரெத்தினம் நாவலர் ஈழமேகம் பக்கீர்த்தம்பி, பாவலர் பஸீல் காரியப்பர் ஆகியோரின் படைப்புக்கள்தானும் பூரண திருப்தியாக இல்லை.

இதற்கெல்லாம் காரணம் ஆக்கப்படைப்பாளர்கள் மத்தியில் ஆவணப்படுத்தும் ஆர்வங்கள் போதாமையும், இவற்றைச் சிந்தித்துச் செயல்படுத்தும் அமைப்புக்கள் இல்லாமையும், நிதிப் பற்றாக் குறைகளும்தான் என்றால் மிகை இல்லை.

இந்த வரட்சியான காலக் கட்டத்தில்தான எமது பிரதேச செயலகத்தின் அதிகாரத்தின் கீழ் 2002ஆம் ஆண்டு 'பிரதேச கலை கலாசாரப் பேரவை' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு இலங்கியது.

இது ஆண்டுதோறும் சாகித்திய கலாசார விழாக்களை நடாத்தி 'பட்டறை' எனும் பெயரில் விழாச் சிறப்பு மலர்களையும் வெளியிட்டு இருந்தது.

இந்தப் 'பட்டறை' மலர்களில் இப்பிரதேசத்தின் கிராமியக் கவிப்புலவர்கள் கவிஞர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், நாவல் ஆசிரியர்கள், நாடக எழுத்தாளர் - கலைஞர்கள்... என்று பல தகவல்களும் இடம்பெற்று இருந்தன. இருந்தாலும் தொகுப்பு - நூல் - தொகுதி... என்று எந்த ஓர் ஆவணத்தையும் வெளியீடு செய்யக்கூடிய சாத்தியங்கள் இல்லை.

இந்தக் காலக்கட்டத்திலேதான் எமது பிரதேச செயலாளரும் எழுத்தாளருமான ஏ. மன்சூர் பி.ஏ (SLAS-I) அவர்களது தலைமையில் மத்திய அரசின் கலாசாரத் திணைக்களத்தின் பணிப்புரையின் நிமித்தமாக 2016.03.14ஆம் திகதி 'பிரதேச செயலக கலாசார அதிகாரசபை' ஒன்று ஸ்தாபிதமானது. இதன்

ஒருங்கிணைப்பாளராகவும் நானே இயங்கிக் கொண்டும் இருக்கிறேன்.

இந்தக் 'கலாசார அதிகாரசபை' தனது முதலாவது பணியாக கலை- கலாசாரப் போட்டிகளை நடாத்தி முடித்து இருக்கிறது. இது தொடர்பான 'கலை கலாசார விழா' விரைவில் இடம்பெறவும் இருக்கிறது.

இந்தக் கால சூழ் நிலையில்தான ஓர் ஆவணமாக கவிதைத் தொகுதி ஒன்றினை வெளியிட்டு இருக்கிறோம்.

இப்பிரதேசத்தின் முது பெரும் கவிஞரும், எழுத்தாளரும், கலைஞருமான கலாபூஷணம் மாறன் யூ. ஸெயின் அவர்களால் எழுதப்பட்ட காத்திரமான ஐம்பது கவிதைகளைக் கொண்ட 'இரத்த நரம்புகள்' எனும் பெயரிலான கவிதைத் தொகுதியினையே இப்போது வெளியிட்டு இருக்கிறோம்.

இப்பிரதேசத்தின் கலை-இலக்கிய-கலாசாரத்துறைகளின் மேம்பாடுகளுக்கும், எமது பிரதேச செயலக கலை கலாசாரப் பிரிவின் பணிகளுக்கும் காத்திரமான பங்களிப்புக்களைச் செய்து கொண்டுவரும் கலாபூஷணம் மாறன் யூ. ஸெயின் அவர்களின் கவிதைத் தொகுதியினை எமது 'பிரதேச செயலக கலாசார அதிகாரசபை', ஆனது - இதன் தலைவரும் பிரதேச செயலாளருமான எழுத்தாளர் ஏ. மன்சூர் அவர்களின் தலைமையில் வெளியிட்டு வைப்பது எமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதுபோன்ற இப்பிரதேசத்தில் இலங்கும் ஏனைய எழுத்தாளர்கள் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்களும் இன்றைய எதிர்கால சந்ததியினரின் தேடல்களுக்குப் பயன்படக் கூடியவகையில் ஆவணங்களாக வெளியிடப்படுவதற்கு எல்லீரும் ஆவனசெய்தால் பயனுடையதாக இருக்கும்.

**கலைஞினி ஏ.எல்.பரீனா**
(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
ஒருங்கிணைப்பாளர்
பிரதேச செயலக கலாசார அதிகாரசபை
சம்மாந்துறை.

# எனது
# முகவுரை

கல்வி கற்கின்ற இளமைக் காலத்தில் இருந்தே கவிதை, நாடகம்,கட்டுரை... இன்னோரன்ன கலை இலக்கியத் துறைகளில் எனக்குள் இனம்புரியாத கனவுகள்!

இக்கனவுகளை நனவாக்கும் நோக்கில் முதலில் நாடகங்களை எழுதி ஆர்வம்மிக்க சகமாணவ - மாணவிகளையும் இணைத்து - இயக்கி நிறையவே அரங்கேற்றி இருக்கிறேன்.

1954ஆம் ஆண்டுக் காலத்தில் இருந்துதான் கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள்... என்று எழுதுவதிலும் அரங்கேற்றுவதிலும் கூடுதலான வேகங்களைக் காட்ட ஆரம்பித்தேன்.

எழுத்தாளர்களும், கலைஞர்களும், இலக்கியவாதிகளும் வரலாற்று ஆய்வாளர்களுமான ரவீந்திரநாத் தாகூர், அல்லாமா முகம்மது இக்பால், தெ.பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, டாக்டர் மு. வரதராசன், கா.அப்பாத்துரை, அப்துல் றஹீம், அறிஞர் அண்ணாத்துரை, அகிலன், சாரணபாஸ்கரன், இரா பி.சேதுப்பிள்ளை, புதுமைப்பித்தன், கா.பொ.இரத்தினம், எஸ். பொன்னுத்துரை. இளங்கீரன் சுபைர், டொமினிக் ஜீவா... இன்னோரன்ன அறிஞர்கள் - எழுத்தாளர்களின் ஆக்கப் படைப்புக்களும், சங்ககால - சங்கம் மருவியகால தமிழ் இலக்கியங்களுமே எனது எழுத்தாற்றல்களுக்கும் ஆக்கப் படைப்புக்களுக்கும் காரணிகளாகவும் உந்து சக்திகளாகவும் இலங்கின.

இத்தன்மைத்தான எனது உருவங்களுக்கு உயிர்கள் கொடுத்து பிரசுரம் செய்து வெளிப்படுத்துவதற்கு முதன் முதல் களம் அமைத்து உதவியவர் மரணம் எய்திய எழுத்தாளரும் பத்திரிகையாளருமாகிய திருவாளர் எஸ்.டி. சிவநாயகம் அவர்கள்தான் என்றால் மிகைஇல்லை. இவரது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரபலம் பெற்று இலங்கிய 'சுதந்திரன்' பத்திரிகைதான் எனக்கு முதல் களமாக இழைந்தது.

இத்தொடு கிருஷ்ணமூர்த்தியின் 'கல்கி' மற்றும் கலைமகள், கலைஞரின் முத்தாரம், சிற்பியின் 'கலைச்செல்வி', சுபைரின் மணிக்குரல், அன்புமணியின் 'மலர்' இன்னோரன்ன சஞ்சிகைகளையும் இங்கு குறிப்பிடமால் இருக்க இயலாது. இந்தக்

இக்களங்களைப் பயன்படுத்தி எழுதிக் கொண்டே இருந்தேன்.

இந்த இலக்குகளுக்கும் பயணங்களுக்கும் 1956ஆம் ஆண்டு உதயமான "கலாபிவிருத்திக் கழகம்", 1971ஆம் ஆண்டு உதயமான "தேசிய கலைக் குன்றம்", 1973ஆம் ஆண்டு உதயமான "சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம்", 1992ஆம் ஆண்டு உதயமான "தேசிய கலை இலக்கியத் தேனகம்", 2002ஆம் ஆண்டு உதயமான "பிரதேச செயலக கலை கலாசாரப் பேரவை"... இன்னோரன்ன அமைப்புக்களின் இலட்சியங்களும் பயணங்களும் அவ்வப்போது பக்க துணையாக இயங்கின. இன்றும் இயங்கிக் கொண்டும் இருக்கின்றன.

ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், உருவகக்கதைகள், நாடகங்கள் என்று விரிய ஆரம்பித்தன.

சுதந்திரன், வீரகேசரி, தினகரன், தினபதி, சிந்தாமணி, செய்தி, கலைமுரசு, தினக்கதிர், நவமணி, புதுப் பாதை... இன்னோரன்ன பத்திரிகைகளிலும், கல்கி, கலைச்செல்வி, மணிக்குரல், மலர்... இன்னோரன்ன சஞ்சிகைகளிலும், கலை அமுதம், தேன் மலர், வெண்முத்து, அறுவடை, அல்முனீறா, பட்டறை... இன்னோரன்ன சிறப்பு மலர்களிலும், முற்றத்து மல்லிகை, கவிதைச் செல்வம்... இன்னோரன்ன தொகுப்புக்களிலும் எனது ஆக்கங்கள் - படைப்புக்கள் பிரசுரமாகி வெளிவந்து இருந்தன.

இவ்வாறு அவ்வப்போது வெளிவந்த எனது ஆக்கக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், எழுதி இயக்கி அரங்கேற்றிய நாடகங்கள் - வில்லிசைப் பாட்டுச் சித்திரங்கள்... இன்னோரன்னவற்றைப் பார்த்தவர்கள் - படித்தவர்கள் எனது இலக்குகளையும் கனதிகளையும் இலட்சியப் போக்குகளையும் தெளிந்தே இருப்பார்கள்.

எனது எழுத்துக்கள் - ஆக்கங்கள்... இடைவெளிகளை நிரப்புவதற்காக - நேரங்களை கழிப்பதற்காக எழுதப்பட்டவை அல்ல. எனக்கென்று ஓர் இலக்கும் பார்வையும் இருக்கின்றன. எத்தன்மை விமர்சனங்கள் எழுந்தாலும் எனது இலக்குகள் பிரழாமல்தான் எழுதினேன் - இன்றும் எழுதிக்கொண்டும் இருக்கின்றேன். இம்மண்பதியில் வாழும் மனித வாழ்வியலின் மேம்பாடுகளைக் கருத்திற் கொண்டே எனது படைப்புக்கள் இழையும்.

இந்த விதமான எண்ணக்கருக்களை கவிதை வடிவங்களில் வெளிக்கொணர்ந்த எனது நூற்றுக்கணக்கான கவிதைகளில் ஐம்பது கவிதைகளை மட்டும் கொண்ட இந்த "இரத்த நரம்புகள்" எனும் பெயரினாலான கவிதைத் தொகுதியே வெளியிடப்படுகிறது இப்போது.

எந்த ஓர் எழுத்தாளனின் - இலக்கியப் படைப்பாளனின் ஆக்கப் படைப்புக்கள் நூல்களாக - தொகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டு ஆவணங்களாக வெளிவரும் போதுதான் அவற்றின் கனதிகளையும் பெறுமதிகளையும் தெளிந்து கொள்ள இயலும்.

இதன் நிமித்தம் எம்பிரதேசத்தில் கலை - இலக்கிய - கலாசார... சுவடுகளை அடையாளப்படுத்துவதிலும், மற்றைய சகோதரப் படைப்பாளர்களின் ஆக்கங்களை ஆவணங்களாக வெளியிடுவதிலும்தான் கூடுதலாக அக்கறை கொண்டு இயங்கினேன் - இன்றும் இயங்கிக் கொண்டும் இருக்கின்றேன்.

இந்தச் சூழ்நிலையில்தான் எனது இலக்கிய - வாசக நேசங்களின் உளப்பூர்வமான உந்துதல்களால் அவ்வப்போது பத்திரிகைகள் - சஞ்சிகைளில் வெளிவந்ததும் வெளிவராததுமான எனது கோவைகளில் இருக்கும் நூற்றுக்கணக்கான கவிதைகளில் ஐம்பது கவிதைகளை மட்டும் கொண்ட இக்கவிதைத் தொகுதியினை வெளியிடும் முயற்சிகளில் இறங்கினேன்.

இதற்கு ஆசீர்வாதம் வழங்கி அணிந்துரைகள் வழங்கிய தென்கிழக்குப் பல்கலைகழக தமிழ்த்துறைத் தலைவரும், பேராசிரியரும், எழுத்தாளருமான கலாநிதி றமீஸ் அப்துல்லாஹ் (எம்.ஏ) அவர்களுக்கும், சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் தலைவரும் பிரதேச செயலாளருமான எழுத்தாளர் ஏ. மன்சூர் B.Com (SLAS - Special Grade) அவர்களுக்கும், கிழக்குப் பல்கலைகழக பேராசிரியரும் எழுத்தாளருமாகிய கலாநிதி சே. யோகராசா அவர்களுக்கும், எழுத்தாளர் திருமதி கௌசல்யா கணேஸ்வரன் அவர்களுக்கும் எனது நன்றி இதயங்கள்.

இத்தொடு என் தொடர்பான ஒரு சில தகவல்களை எனது இத்தொகுதியின் முதலிலும் முடிவிலுமாக அறிமுகம் செய்து என்னை கூச்சப்படுத்தி இருக்கின்ற கல்விமானும் பிரபல கவிஞருமாகிய மன்சூர் ஏ. காதிர் BA அவர்களையும், வாசகரும் ஆய்வாளருமாகிய எஸ்.எஸ். மணியம் அவர்கயையும் என்னால் மறக்க இயலாது.

இந்த 'இரத்த நரம்புகள்' எனும் எனது கவிதைத் தொகுதியை முதன்முதலாக வெளியீடுசெய்ய முன்வந்த சம்மாந்துறை "பிரதேச செயலக கலாசார அதிகார சபை" எனும் காத்திரமான அமைப்பின் தலைவர் எழுத்தாளர் ஏ. மன்சூர் BA (SLAS-I) அவர்களுக்கும், பிரஸ்தாப கலாசார அதிகாரசபையின் ஒருங்கிணைப்பாளராக இலங்கும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கலைஞினி ஏ.எல். பரீனா அவர்களுக்கும் , கலாசார அதிகாரசபை உத்தியோகத்தர் - உறுப்பினர்... எல்லீர்க்கும் எனது கடமைப்பாடுகள் என்றும் இருக்கின்றன.

இத்தன்மைத்தான ஆளுமைமிக்கவர்களின் இதயபூர்வமான பிரவாகங்களின் சுழிகளில் எனது இக்கவிதைத் தொகுதியினை முன்வைத்து இருக்கிறேன்.

இத்தொகுதியில் ஒளிர்கின்ற ஒவ்வொரு கவிதைகளிலும் இழைகின்ற கருத்துக்கள் - ஒப்புவித்தல்கள் - காரங்கள்... பற்றி பார்ப்பவர்கள் படிப்பவர்கள் தத்தம் விமர்சனங்களை வெளிக்கொணரின் எனது இரத்தங்களையும் நரம்புகளையும் சீரமைத்து இலக்குகளைப் புடம்போட்டுக் கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

**கலாபூஷணம் மாறன் - யூ . ஸெயின்**

# புதை பொருள்


| கவிதைகள் | பக்கங்கள் |
|---|---|
| 01. பொங்கிப்படைத்தவை போதும் | 25-26 |
| 02. பூட்டைத்திற! | 27 |
| 03. ஏனிந்த உளவாரம் | 28-29 |
| 04. உழைத்துச் சிதைகிறது | 30 |
| 05. இருளில் நான் | 31 |
| 06. புல்லறுக்க யார் இருக்கார்! | 32 |
| 07. எண்ணி வாழ்கின்றாள் | 33-34 |
| 08. எனைவருத்தல் இதுமுறையோ? | 35-36 |
| 09. பரதேசி | 37 |
| 10. சர்மிளாவின் சவால் | 38-40 |
| 11. என் வேர்கள் ஓடுவதற்கு | 41-42 |
| 12. தமிழ் எங்கள் தாய் | 43 |
| 13. மெத்தவும் அழுந்துகிறேன் | 44-45 |
| 14. தங்கமே நீ கலங்காதே! | 46 |
| 15. பாதையில் ஒரு தமிழ்ப்பாலம் | 47-48 |
| 16. தேன் தமிழ் பாடுவோம் | 49 |
| 17. பூத்திடும் எதிர்காலம் | 50-51 |
| 18. எங்கும் தமிழை எறியாதோ! | 52 |
| 19. அன்னைக்குப் பொன்முடி | 53-54 |
| 20. இனியும் ஓய்ந்திருக்க் இயலாது | 55-57 |
| 21. ஒளியை காண்கின்ற ஒருநாள் | 58-59 |
| 22. படிப்புக்கள் இருக்கட்டும்! | 60 |
| 23. இதயமே உன்னை அழைக்கிறேன்! | 61 |
| 24. சட்டி இறைச்சியின் சப்தம் | 62-63 |
| 25. பற்றி எரிகின்றேன் | 64 |
| 26. கள்ளுண்ணும் பக்தர்கள் | 65-66 |
| 27. சுகந்தம் என்னே சொல்வேன்! | 67 |
| 28. ஏனிந்த மோகம்? | 68 |
| 29. தூது | 69 |
| 30. என்னை விட்டுவிடு! | 70-71 |
| 31. என் விருப்பம் இறவாது வாழுவதே! | 72-74 |
| 32. அகதிகள் அவலம் | 75-76 |
| 33. மனிதத்தை உயிர்ப்பிக்க மாட்டாய் | 77-78 |
| 34. பக்தர் மீண்டும் பயணம்...! | 79-81 |

35. ஒதுங்கி மறுகுவதேன் ஓரம்போய்? 82-83
36. சாரதா மாமியை பார்த்துக்க! 84-85
37. நெஞ்சை ஊனங்கள் ஆக்குதல் நீதியா? 86-87
38. தலைநிமிர்ந்து வாழணும் என்தங்கம்மா! 88-89
39. முள்ளு முருக்கன் பூக்கள் 90
40. மனிதங்கள் பூத்து மலர்ந்தால்...! 91-92
41. காலங்கள் பதில்சொல்லும் பயணம்தேவை! 93-94
42. தொடருங்கள் பயணத்தை! 95-96
43. தேசிய ஒற்றுமை 97-98
44. தனித்துவங்கள் தழல்கின்றன... 99-100
45. வாழ்வியல் ஒளிவர்தற்கு 101-102
46. குமுறல் 103
47. தருமங்கள் பூத்திடணும்! 104-105
48. இரத்த நரம்புகள் 106-107
49. இலங்கை சிறீலங்கா ஈழம் 108-109
50. துறைமுகம் பூத்த சம்மாந்துறை! 110-111

# பொங்கிப்படைத்தவை போதும்!

நாங்கள் நெடுங்காலம் உங்களை
நம்பி கிடந்துவிட்டோம்!
நீங்கள் எங்களது உயிர்
நெஞ்சின் நோவுகளைத்
தாங்கிக் கொஞ்சமெனும் தொட்டுத்
தடவிப் பார்த்ததில்லை!
ஏங்கித் தவம் கிடந்தோம் உங்கள்
இதயம் திறக்குமென்று!

உங்கள் நரம்புகளில் புடைத்து
உதையும் பாரங்களை
எங்கள் நெஞ்சதிர ஊன்றி
இறக்கிச் சுமத்திவிட்டுப்
பொங்கிப் படைத்துசுகம் கண்டு
போதையில் தனைமறந்து
எங்கள் வாழ்வியலைச் சுட்டு
எரித்து அழித்தீர்கள்!

கத்திகள் கோடரிகள் கிளறும்
கலப்பை மண்வெட்டி
சுத்தியல் அரிவாள்கள் பாரம்
சுமக்கும் கூடைமுதல்
அத்தனை சுமைகளையும் தோளில்
அமர்த்தி விட்டீர்கள்
மெத்தவும் அழுந்துகிறோம் எங்கள்
மேனித் தசைநொறுங்க!

கல்லும் மலைமுகடும் ஈறல்
காடும் சுடுமணலும்
கொல்லும் விஷக்காற்றும் உடல்
குளிரும் பனிமலையும்
அல்லும் பகலுமாக நாங்கள்
அழுந்த... நீங்களெல்லாம்
மெல்லத் தள்ளி நின்று சொர்க்க
மிதப்பில் மகிழ்ந்தீர்கள்

எங்கள் வேதனைகள் என்றால்
ஏளனம் உங்களுக்கு
உங்கள் வாழ்வினுக்காய் நாங்கள்
உழைத்துப் போட்டதெல்லாம்
எங்கள் தாழ்வினுக்கே என்று
எண்ணிக் குமுறுகிறோம்
நீங்கள் பூட்டிவிட்ட செக்கின்
நிலமை புரியாமல்!

“இங்கண் ஒளிர்கின்ற சர்வ
இயற்கை... இறைமைகளும்
சிங்கம் எங்களுக்கே...” என்று
சீண்டியே எங்களது
பங்கை சுரண்டி எங்கள் வாழ்வைப்
பாழாக்கி உங்களுக்குப்
பொங்கிப் படைத்தவைகள் இனிப்
போதும் போதுமினி!



# பூட்டைத் திற...!

நீர்இந்த நாட்டின் நச்சுமரம் உன்றன்
நெஞ்சுள் இழைகின்ற வேட்கை பொல்லாது
நிழலாடும் நின் இடமெல்லாம் விஷக்கிருமிகள்
நிம்மதி இழந்தின்று தவிக்கிறேன் விடிவின்றி
நீராக எழுப்பிவிட்ட பசி!

உன்றன் வெறிகளுக்கென் வியர்வைப் பனிகளை
உனக்கே உருத்தான தொனியில் விலைபேசி
உத்தரவு இட்டாய் கைகட்டி நானும் அந்த
உத்தரவை ஜீரணித்து உனக்காக நிறைவேற்ற
உடன் பட்டேன்!

நீர்என் நெஞ்சினுள் ஊதிவிட்டாய் நெருப்பில்
நின்று வியர்த்து நிலமங்கை ஈரமுற
நேரம் காலம் நோக்காது உத்தரவை
நிமிர்ந்து நின்று சிருஷ்டித்து முடித்துவிட
நினைத்து எழுந்தேன்!

சீர்உற உன்றன் தேனான உத்தரவை
சீவனைக் கொடுத்து முடித்தேன்... மனநிறைவு
சிந்திய வியர்வையில் ஆத்ம திருப்தி
சில்என்று நரம்புகளும் பூரித்தன... மறுகணமே
சிவந்தது நெருப்பு!

நானே இரவு பகல் பாடுபட்டு சிருஷ்டித்து
நானே காலடியில் கொணர்ந்தும் சமர்பித்தேன்
நீயோ பூட்டியும் திறந்தும் பூசைசெய்து
நாய்போல் எலும்புகளை உவ்வொன்றாய் இழுத்து
நக்கிச சுவைக்கின்றீர்!

இரும்புப் பெட்டிகளைச் சிருஷ்டித்த ஏழைஇவன்
இதை மறந்து நீ ஏன்பூட்டி வைக்கின்றீர்?
இந்த நாட்டை வளமாக்கும் செல்வங்கள்
இன்பக் களஞ்சியங்கள் இறுகப்பூட்டி வைத்து
ஏன்நீர் பசிதனை எழுப்புகிறீர்
பூட்டைத் திற...!

# ஏனிந்த உளவாரம்?

இந்தச் சமூகத்தின் எதிரிகளே
எதற்காக எங்களோடு
சொந்தம் கொண்டாட விழைகின்றீர்...
சுகம்காண... இனி வேண்டாம்
தொந்தி பெருத்தவைகள் போதாதா
துணைநாடித் தவிக்கின்றீர்
நிந்தை போதும் இனி எங்களது
நெஞ்சிலே மிதித்தவைகள்!

எங்கள் அடிவயிற்றின் ஏரிவுகளை
எண்ணத்தில் எடுக்காமல்
உங்கள் விருப்பம்போல் இதுகாலும்
உறவுகளைச் சிதைத்தீர்கள்!
இங்கு எதற்காக இன்னும்நாம்
எலும்புகளை ஒடிக்கின்றோம்
உங்கள் சுகத்திற்கா சொல்லுங்கள்
ஏனிந்த உளவாரம்?

கரும்பைப் பிழிவதுபோல் எலும்புகளைக்
கசக்கிப் பிழிந்தீர்கள்
துரும்பாய் எண்ணிஎமைக் காலுக்குள்
துவைத்து மிதித்தீர்கள்
விருந்துகள் படைத்துண்டு எங்களது
வயிறுகளை எரித்தீர்கள்
இருந்தும் எங்களது பசிபோக்க
இதுநாளும் பொறுத்திருந்தோம்

உங்களது வாய்ப்புக்கள் வசதிகளை
உயர்த்தி வளர்ப்பதற்காய்
எங்களைப் பலியாக்கி இமயத்தில்
ஏறிப்போய் நிற்கின்ற
உங்களது தலைவிதியின் விளைவுகளை
ஒருகணம் எண்ணுகிறோம்
பொங்குவது மங்கும்... இதைநீங்கள்
புரிந்து கொள்ளுங்கள்!

போதும் போதும்இனி உங்களது
பொறிகளில் பட்டவைகள்
சூதும் வாதுகளும் புரியாமல்
சுரண்டலுக்கு ஆளானோம்
வாதைப் படுகின்றோம் இன்று உங்கள்
வர்க்கத்தின் கொடுமைகளால்
போதும் போதும்இனி நமக்குள்ளே
பொல்லாத பொல்லாங்கு!

# உழைத்துச் சிதைகிறது...!

இருள் நிறத்தைக் குழைத்து
எறும்பாகச் செதுக்கிவிட்ட
அருள் வடிவோ அந்த
ஆணுருவம்? தான்பிறந்த
பொருள் விளங்கும் பாங்கே
புரியாமல் விலையாகித்
தெரு முழுதும் தன்னைத்
தியாகம் செய்கிறது!

சுடும் வெயிலும் கொட்டிச்
சொரிகின்ற மழைநீரும்
கடும் காற்றும் குளிரும்
கண்ணீரும் கம்மலையும்
படும் துயரம் அந்தோ
பரிதாபம்... அதன் கோலம்
கொடும் பசியால் உயிரைக்
கொன்றே அழக்கிறது!

உயர் மாடம் கட்டி
உப்பரிகை மஞ்சையினில்
அயர்கின்ற நரிகள்
அடிமைச் சாசனத்தில்
உயிர் விடவோ இன்னும்
உழைத்துச் சிதைகிறது
மயிர் முழுவதும் நரைத்து
மாறுவதும் புரியாமல்!

தன் உடலை அந்தத்
தரங்கெட்ட நரிகளுக்குப்
புண் ஆக்கித் தின்னப்
போட்டவைகள் போதாதா...
கண் விற்றுப் படைக்கும்
கற்பனைச் சித்திரத்தில்
என்ன வரம் கேட்டோ
எலும்புகளை ஒடிக்கிறது!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# இருளில் நான்...!

மூட்டை சுமந்து
முடிமன்னர் உமர்பாறூக் ஏழை
ஏழை
வீட்டில் கொணர்ந்து
விளக்கேற்றி
ஒளிதந்தார்...!

அந்த
ஏட்டைப் படித்து
இன்புற்ற ஓர்ஏழை
இன்றுதன்
பாட்டைத் தினமும்
பாடிப்
புலம்புகிறான்

“நான்
மூட்டை சுமந்து
முதுகெலும்பை ஒடிக்கின்றேன்
என்
வீட்டு விளக்கு
எங்கிருந்தோ
ஒளிர்கிறது...”



# புல்லறுக்க யார் இருக்கார்?

பன்பிடுங்கி பாய் இழைத்து
பசிபோக்க... இதுகாலும்
என்புருகப் பாடுபட்டு
இரைதேடி... வாழ்ந்து வந்தோம்.

இன்றோஎன் கணவன் இல்லை
இறந்தஅன்று... வெள்ளம்போல்
மன்பதைகள் வந்தடக்கி
மண்ணையும் போட்டார்கள்.

போட்டவர்கள் போய்விட்டார்
புலம்பிஅழும் எனைவந்து
கேட்பவர்கள்... எவருமில்லை
கிடந்துநிதம் அழுந்துகின்றேன்.

'இத்தா' வில் இருக்கின்ற
என்னுடைய துயரங்கள்...
ஒத்தாசை... என்றுதந்த
ஒருவருமே கிடையாது.

உற்றவர்கள் எவருமில்லை
உறவுசொல்லிப்... பயனுமில்லை
மற்றவரைச் சொல்லிஎன்னே...
மழைவந்தா பொழிந்துவிடும்!

ஏழைகளின் தாகங்கள்...
எண்ணிமனம் இரங்காத
கோழைகளும் போலிகளும்
குழியோடும் நரகத்தில்...

இல்லாத இஜ்ஜீவன்...
"இருந்திட்டால்..." குஞ்சுகளின்
பொல்லாத பசியினுக்குப்
புல்லறுக்க யார் இருக்கார்?

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# எண்ணி வாழ்கிறாள்...

கையில் ஒருகம்பும் - சிறு
கயிறும் சணல் சாக்கும்
பொய்யே அறியாத - இளம்
பூக்கும் மொட்டு அவள்
வெயிலில் காய்ந்துஎழில் - முக
வெட்டுக் குலைந்தவளாய்ப்
பையவே அடிஎடுத்து - வயல்
பக்கம் செல்லுகிறாள்!

கால்கள் பின்னலிட - பூங்
கைகள் மருங்கசைய
வேல்கள் போன்றஅவள் - கரு
விழிகள் சுழலஒரு
கால்வாய் ஓரமதாய் - அக்
கன்னி வழிநடந்து
கால்கள் கடுக்கஅந்த - வயல்
காப்புள் இறங்கிட்டாள்!

கதிர்கள் அறுவடைசெய் - கின்ற
காலம் அவள்அந்தப்
புதிய வயலுக்குள் - வெட்கிப்
போன முதல்நாள்தான்...
மதியம் கொளுத்தவயல் - எங்கும்
மறுகிக் கிடக்கின்ற
கதிர்கள் ஒவ்வொன்றாய்ப் - பொறுக்கிக்
கட்டி எடுக்கின்றாள்.

கதிர்கள் பொலியும் நல்ல - கட்டுக்
கத்தகளை நெல்லாக்கி
புதியதன் சாக்கினுக்குள் - அள்ளிப்
போட்டு ஒரு மூடைகட்டி
விதிதனை நொந்தாலும் - அந்த
வேதனையுள் ஒளிர்கின்ற
புதியஒரு காலம்தன் - வாழ்வில்
பூப்பதாக எண்ணுகிறாள்...

தலையில் பெரியசுமை - அவள்
தாங்க இயலாமல்
நிலைகள் தடுமாறி - வழி
நெடுகவே நடந்துஉயிர்
சிலைபோல் நடைபயில - அவள்
சேலையில் காற்றசைய...
நிலையாய் ஒரேஎண்ணம் - அதில்
நிறைந்தே வாழுகின்றாள்!



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# எனை வருத்தல் இது முறையோ?

என்னை ஈன்றவளின் இருக்கையை நோக்கி
ஏங்கிடும் இதய தாகத்தை
என்னென்று சொல்வேன் இனிஎன்று காண்பேன்
எண்ணத்தில் அமைதியை நானே
சின்னத்தில் துள்ளித் திரிகின்ற போழ்தில்
சிறையாக இருந்துஅந் நாளில்
தன்னந்த நிமையாய் தவிக்கின்ற வேளை
தாலாட்டுப் பாடினள் யாரோ?


அறியாத வண்ணப் பருவத்தில் அந்நாள்
அன்புதந் தமுதூட்டி இன்னும்
நெறியாக என்னை நீராட்டி யாவும்
நிலமெலாம் காண்பித்த தெல்லாம்
குறிவைத்து தானோ குழந்தையில் தொட்டில்
கொண்டெனை வளர்த்துவந் தார்கள்
புரியாத எந்தன் தன்மைகள் பற்றிப்
புகன்றிடத் தாயவள் இலையே!

வேலைக்கு என்னை விரட்டினள் இங்கே
வேகுமென் இதயத்தை அறியாள்
காலைக்கு மாலை கைக்குஓய் வில்லா
காரியம் ஆற்றுறேன்... ஆனால்
சேலைக்கு மாற்றுச் சேலையொன் றில்லை.
சீரிலா வாழ்வினைப் பார்த்தும்
மூலையில் கிடக்குமென் கோலத்தைக் கேட்க
முந்திட யாரும்இங் கிலையே!

பெண்ணென்று நானும் பிறந்ததில் இங்கு
பேறேதும் இருக்கின்ற தாமோ
"கண்"என்று போற்றும் பெண்இனம் என்றால்
கலங்கிடக் காண்பது ஏனோ!
எண்ணத்தில் என்றன் இருக்கின்ற ஆசை
எப்படித் தப்பாகும் இந்த
மண்ணிலே வாழும் மங்கைபோல் நானும்
மகிழ்வினைப் பெறுவதெந் நாளோ?

மற்றவர் காணும் மகிழும்நல் வாழ்வு
மாதெனுக் கில்லையே என்றன்
பெற்றவர் இல்லேல் "பேய்"என்று எண்ணிப்
பிழிவது தான்நெறி யாமோ
கற்றவர் கோடி கற்பவர் கோடி
கல்விகள் மலிந்தென்ன நாட்டில்
அற்றவள் வாழ்வு சாவுதான் என்னின்
அதற்குமோ தடையொன்று ஐயா?

பொல்லாத காலம் போகுமோ என்றன்
பொங்கிடும் பருவத்தின் இனிமை
இல்லாமற் போமோ இதயமொன் றிருந்தால்
இதைச்சொல்ல இருக்கின்ற நாணம்
வெல்லாத வாழ்வில் வேகுறேன் வெம்பி
வெளியிட்டுச் சொல்லநா வருமோ
வல்லோனே ஏனோ வழங்காத ஊனம்
வைத்தெனை வருந்துதல் முறையோ?



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# பரதேசி

எங்கும் திரிவேன் எனது சீவியத்தில்
ஏற்றம் இறக்கம் எதுவுமில்லை
தொங்கும் உடலின் தூங்கும் உயிர்போனால்
தொல்லை கிடையாது அதுமட்டும்
தங்கும் மடங்கள் சத்திரம் எள்றெல்லாம்
தாவித் திரிகிறேன் என்செயலால்
பங்கம் எவர்க்கும் கிடையாது பழியின்றிப்
பகையின்றி புரிந்து வாழுகிறேன்.

எனக்கு என்றேதும் இல்லை அதனால்நான்
எதற்கும் கவலை கொள்ளேன்என்
மனதில் பெருமை பொறாமை பேராசை
மறந்தும் எனக்குள் எழுந்தில்லை
தனத்தில் 'பெரியோன்' என்று தனைக்காட்டும்
தாகம் எனக்கு கிடையாது
இனத்தை இடத்தை எண்ணி வாழ்வதற்கு
என்னதான் இருக்கு எனக்கென்று?

பாத்திரம் ஏந்திப் பட்டிண வீதியெல்லாம்
பசிக்காய் அலைந்து பாடுமெனைக்
காத்திர மாகக் காப்பவர் இல்லையதால்
கண்ட தடமெல்லாம் கண்ணயர்வேன்
ஆத்திரம் வந்தால் ஆண்டவனை கையெடுத்து
ஆறுதல் மனதிற்கு அளித்திடுவேன்
'கோத்திரம் குலம்' என்று கொக்கரிக்கும் எண்ணங்கள்
கொஞ்சமும் எனக்குள் கிடையாது.

கடைகள் புகுந்து கட்டிடம் படியேறிக்
காலம் போக்க நான்நடந்த
நடைகள் ஊன்றும் கோலறியும் என்னுடைய
நக்கும் தொழிலின் துணையதுவே
இடையில் எனககுள் எரிகின்ற நெருப்புகளை
எப்படி உரைப்பேன் எனக்குவரும்
தடைகள் போக்கத் தக்கவர் இருந்தென்ன...
தரித்திரம் பிடித்த பரதேசிநான்!

# சர்மிளா விடும் சவால்

சர்மிளா நித்தமும்
சாவுதனை எண்ணிச் சாகின்றாள்
நிம்மதி இழந்து
நீறுகள் பூத்த நெருப்பாய்!

ஒழுக்கம் பண்புகள்
ஒளிரும் குணங்கள்... அவளது
அழகிலும் குறையில்லை
அனுசரிக்கும் பாங்கிலும் வழுவில்லை

அவளது கிராமத்தில்
ஆராவது உதவிகள் கேட்டால்
தவறாது அவளதைக்
தருமம் எனக்கருதிச் செய்திடுவாள்

இந்தவித மானவளின்
இதமான குணங்கள் நலன்களை
அந்தக் கிராமத்தில்
அறியாதவர் எவருமே இல்லை

ஆனாலும் அவளுடைய
அஸ்தமனம் ஆகின்ற பருவத்தை
காணாத வர்கள்போல்
கண்டாலும் மறுகிக் கரந்திடுவர்

படுகின்ற அவளது
பருவத்தின் காலத்தைப் பற்றிஒரு
கடுகளவும் எவராதல்
கவனத்தில் கொள்வது கிடையாது

உறவினர்க்கு அவள்பால்
உள்ளன்பு அக்கறை இருந்தாலும்
வறுமைகள் அவர்களது
வாய்களைக் கட்டி விடுகின்றன.

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

"படைத்தவன் காப்பான்"
பல்லவிகள் பாடும் சமூகத்தின்
விடையினது பொருள்களை
விளங்கிய சர்மிளா...

"இக்காலத் திற்குகந்த
இருக்கிறதா நல்லதொரு கல்வீடு?
பக்கத்தில் ஏழேக்கர்
பாய்ச்சல் வயல்காணி இருக்கிறதா?

ஐந்தாறு இலட்சங்கள்
ஆருக்கும் தெரியாமல் தரவேண்டும்
சொந்தமோ பந்தமோ
சொத்துக்கள் இருந்தால் சொல்லுங்கள்!

எனக்கு இருக்கின்ற
இளைய சகோதரிகள் அணிவதற்கு
கனமான பெண்டன்கள்
காப்புகள் காதணிகள் தரவேண்டும்

செப்புகள் சிமிளுகள்
சீர்வரிசை எல்லாமே செய்திடணும்
அப்போதுதான் பெற்றவர்கள்
அகங்கள் குளிர்ந்து ஆதரிப்பர்"

இதனால்தான் சர்மிளா
எதிர்கால வாழ்வியலை எண்ணி
விதிகளின் தலைகள்மேல்
வேதனையைச் சுமத்தாது தனது

பருவத்தை படவைக்கும்
பேரங்களை எரிக்கின்ற கண்ணகியாய்
உருவம் எடுக்கின்றாள்...
உள்ளம் குமறி இசைக்கிறது!

"என்னைத் தாரமாக்க
எண்ணுகின்ற புருஷரே! இங்குநான்
ஒன்றைச் சொல்லுகிறேன்
ஒதுங்காமல் நிதானமாய் கேளுங்கள்!

நீங்கள் ஒரு வீரபுருஷர்
நெஞ்சுரம் மிக்கவர் இருவரும்
மங்களம் பொங்கிட
மணவாழ்வில் மிதந்து வாழுவோம்!

வளவொன்று வாங்கியதில்
வாகான வீடொன்றைக் கட்டுங்கள்!
நிலவும் வானும்போல்
நீங்களும் நானும் வாழ்வதற்கு!

சொத்துக்கள் எனக்கிருந்தால்
சொல்லாமல் தேடிவரும் எனைநாடி
மெத்தவும் அழுத்துதல்
மேலான ஆண்மைக்கு அழகல்ல!

எங்களது பசைகளில்
இறக்கைகள் கட்டிப் பறக்கின்ற
தங்களது வீரங்கள்
தலைகாக்கும் தருமங்கள் ஆகாது!

# என் வேர்கள் ஓடுதற்கு...

கந்தல் உடைகளுடன் - வாழும்என்
கண்மணிகள் நால்வருக்கும் திருமணச்
சந்தையில் விலைகொடுத்து - வாங்குகின்ற
சக்தியொன்று எனக்கில்லை.

மாப்பிள்ளை எவருமின்றி - என்னுடைய
மக்கள்விடும் பெருமூச்சு - அந்தக்
காப்பவிழ்ந்த தாமரைகள் - விடுகின்ற
கண்ணீரும் நானறிவேன்!

ஒத்துக் குடிசையினில் - பொத்துவந்து
ஒழுகுகின்ற மழைநீரில் இன்னும்நான்
எத்தனைநாள் அழுந்துவது - என்று எங்கள்
இதயத்தை இரும்பாக்கி...

சத்தியத்தை முன்னெடுத்து எங்கள்இந்தச்
சமுதாயம் பாத்திருக்க புழுங்கிமனம்
கத்தியும்மண் வெட்டியுமாய் - சுடுவெயிலில்
கால்கடுக்க நடந்திட்டோம்!

மலையடி வாரத்தில் - அடர்ந்திருந்த
மலக்காரம் காடதனில் சொந்தமாக
நிலையானஒரு குடில்அமைக்க - அங்கலாய்த்து
நெடுந்தூரம் நடந்துவந்து...

குஞ்சுகள் வாழ்வதற்காய் - தாய்ப்பறவை
கூடுஒன்றைக் கட்டுவதற்கு தன்னுடைய
எஞ்சிருக்கம் வாழ்வினுக்குள் இறுதியாக
எடுக்கின்ற முயற்சிகள்போல்

மல்க்காரம் காடதனை - வெட்டி அதில்
மனையொன்றை அமைப்பதற்காய் கண்மதிப்பில்
எல்லைகளை வளைத்துஎந்தன் - கத்தியை நான்
எடுத்து முதல் வெட்டுகிறேன்!

காரல்முள் பற்றைகளும் - அரவங்கள்
கரந்துறையும் புற்றுகளும் படர்ந்திருந்த
சூரைக்கொடி வேர்முழுதும் - அறக்கொத்தி
சுட்டெரித்து வெந்தோம்நாம்...!

வேர்கள் எரிந்திருந்த - திடல்ஒன்றை
வெளியாக்கி அவ்விடத்தே என்கருக்கள்
வேர்கள் ஓடுவதற்கு - அங்கலாய்த்து
வேய்ந்துஒரு குடில்அமைத்தோம்.

மூன்றே நாட்கள்தான் - அக்குடிலில்
மூச்சுகளை விட்டோம் நாம் - நிம்மதியாய்
ஊன்றிக்கால் இருக்கவில்லை - இடிவிழுந்தோர்
உத்தரவு... இடியானோம்...

"மில்ஒன்று கட்டுதற்காய் - இதனைநாம்
மேலிடத்தில் பெறுவதற்கு திட்டமிட்டு
சொல்லிநான் இருக்கையினுள் - இதற்குள்நீர்
சுழியோடல் வரலாமோ...?"

இரத்தக் கண்ணீரை - துடைக்கும்என்
இரத்தக்களை நோக்குகிறேன்... மதுரைதனை
எரித்திட்ட கண்ணகியாய் - மாறினால்தான்
என்வேர்கள் ஓடிடுமா?

# தமிழ் எங்கள் தாய்!

தமிழ்மொழி எங்களின் தாய்மொழி - உலகத்
தலைமை மொழிகளில் தனிமொழி
அமிழ்தினும் இனியநம் அருள்மொழி - எங்கள்
ஆவியை நிகர்த்திடும் உயர்மொழி

இலக்கண இலக்கியம் கொழித்திடும் - ஒல்லும்
இயலிசை நாடகம் செழித்திடும்
கலைப்பணி யால்தமிழ் பேணுவோம் - அதில்
கனிந்திடும் பொருள்வளம் காணுவோம்

பிறமொழி கள்பல பயிலுவோம் - உயர்
பயனதன் வளங்களை நுகருவோம்
மறுமொழி கள்வழி மயக்கினில் - தமிழ்
மருவிடும் இழிநிலை மாற்றுவோம்

பள்ளியில் நித்தமும் பயிலுவோம் - தமிழ்
பால்தரும் சத்துக்கள் பருகுவோம்
சொல்லிலும் எழுத்திலும் செயலிலும் - தமிழ்
சுவைக்கனிந் திழைந்திடச் செய்குவோம்

சங்கம் வளர்த்தநம் தமிழ்மொழி - தொல்
சரித்திரம் பூத்தநல் முதுமொழி
சிங்கஆ சனங்களின் கொலுவிலும் - ஆட்சி
செலுத்திய எங்களின் தாய்மொழி

தாய்மொழி எங்களை ஆளணும் - வாழ்வு
தமிழ்மொழி யால்வளம் காணணும்
ஆய்வுகள் பற்பல ஆற்றுவோம் - ஓதி
அகிலமெல் லாம்தமிழ் சாற்றுவோம்!

# மெத்தவும் அழுந்துகிறேன்...!

என்னை உங்களுக்காய்ச் செதுக்கி
என்மீது நீங்களெல்லாம்
கண்ணும் இமையும்போல் வாழவெனக்
கனவுகள் கண்டேன்நான்

'மண்மாதா' என்றுஎனைத் துதிபாடி
மனதாரப் பூசைசெய்து
"பொன்போல் காத்திடுவோம்" எனை நீங்கள்
பூக்களும் சொரிந்தீர்கள்!

"எல்லோரும் என்னுடைய ஜீவன்களே!"
என்றுதான் உங்களைநான்
செல்லமாய்க் கருதிநிதம் சீர்செய்து
சீவனைக் கொடுத்திட்டேன்.

நெஞ்சிலே தவழ்ந்தோடி விளையாட
நித்தமும் இடம்தந்தேன்
கொஞ்சிக் குலாவிஎன் உள்ளத்தைக்
குளிரவும் செய்தீர்கள்.

இத்தனையும் மறந்துபோய் வழிதவறி
இடையிலே நிற்கிறீர்கள்
மெத்தவும் அழுந்துகிறேன் உங்களது
மேதாவித் தனம்கண்டு

இரண்டாகித் துருவங்கள் இயங்குவதால்
இழுபறிதான் எப்போதும்
முரண்டுகள் பிடிப்பதனால் நல்லதொரு
முடிவெதுவும் கிடைக்காது.

எப்போதோ நடந்திட்ட நிகழ்வுகளில்
ஏற்பட்ட கசப்புகளால்
தப்புகளைத் தொடர்ந்தும் செய்கின்றீர்கள்
தலைமுறைக்கு... அழகல்ல

கலாபூஷணம் மாறன் - யூ. செயின்

இங்கண் வாருங்கள்! ஒன்றித்து
இணைந்து நில்லுங்கள்!
பொங்கும் தமிழ்மண் எல்லோர்க்கும்
பொதுவாகும்... பழிவேண்டாம்

தலைமுறை தலைமுறையாய் என்மடியில்
தமிழ்ப்பால் அருந்திநிதம்
வளர்த்த எனைநீங்கள் பிளப்பதுவா
வருங்காலம்... சிந்திப்பீர்!



# தங்கமே நீ கலங்காதே!

உன்னழகு கண்டுநான் உள்ளம் பூரித்தேன்
உன்னோடு உறவாடி ஒன்றாய்ப் பழகியதால்
அன்றுநீ என்னைவிட்டு எங்குதான் சென்றாயோ?
இனியஎன் வெண்புறாவே உனைநினைத்து வாடுகிறேன்.

இங்குநான் உன்னோடு இருந்த காலத்தில்
இரண்டறக் கலந்துநாம் இனிதாய் வாழ்ந்தோமே
தங்கிநீ எனக்குள்ளெ தந்திட்ட அமைதிகளை
தட்டியே பறித்துஎனைத் தவிக்க விட்டனரே!

காடுகள் மலைதோறும் சுற்றிப் பறந்துவந்து
கானங்கள் பாடிஎனைக் கிறங்க வைத்தாய்நீ
பாடையில் இங்குஎனை விட்டுப் பறந்திடவா
பாவியர் குறிவைத்து உன்னை துரத்தினரோ?

உன்றன்பறப்புதனில் சுதந்திர உணர்வினையும்
உணவுகள் தேடுகையில் காட்டும் உறுதியையும்
கண்ணின் பார்வையினில் ஒளிரும் கருணையையும்
கவிந்த அலகினது குரலின் கனிமையையும்
உன்னில் கற்றதெலாம் உனக்கு தெரியாதா?

என்றன் மகிழ்ச்சிதனைக் கொளுத்தி எரித்தவர்கள்
என்னில் இருந்துமுனைப் பிரித்து விட்டார்கள்
தன்னையே இழந்தின்று தவித்து அழுந்துகிறேன்
தங்கமே எனைக்காண எப்போது வருவாய்நீ!

அமைதியின் இலக்கணமாய் திகழ்ந்த என்புறாவே!
அரக்கர் உனைத்துரத்தி விட்ட நாள்முதலாய்
இமைகள் விழிகெட்டு ஏங்கித் துடிக்கின்றன...
என்றுதான் சமாதானம் என்மனம் அடைந்திடுமோ?

உன்னை எனைவிட்டும் பிரித்த பாவியர்கள்
உள்ளம் இரும்பாகி ஏன்தான் இறுகியதோ!
என்னதான் இருந்தாலும் அவர்களும் படுகின்ற
இடர்களும் நானறிவேன்... என்றோ அவர்ஒருநாள்
கண்ணீர் வடித்தவராய் உனைக்காண ஏங்கிஎன்றன்
கதவினைத் தட்டிடுவர்... தங்கமேநீ கலங்காதே!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# பாதையில் ஒரு தமிழ்பாலம்

பலஸ்தீன முஸ்லீம்கள் மத்திய கிழக்கில்
படுகின்ற துயரங்கள்...
நிலைகண்டும் உலகங்கள் மௌனியாய் குனிந்து
நித்திரை செய்கிறது.

மனிதனைக் கொல்கின்ற இஸ்ரவேல் எஹுதிகளின்
மதம்பிடித்த போக்குகளால்
புனிதமான தன்பதியை இழந்து தவிக்கின்றன
பலஸ்தீன் ஜீவன்கள்

மனிதனைக் கொல்கின்ற ஆதிக்க வெறியர்களின்
மகத்தான சாதனைதம்
புனிதத்தை இலங்கைத் தீவும்தான் காண்கிறது
புத்தர்சிலை முன்பாக!


பூசைகள் செய்துகொண்டே பேரின வாதங்கள்
புரிந்திட்ட பொல்லாங்கில்
தசைகளும் தசைகளும் பலியாகி வெவ்வேறாய்
தடம்பிறழ்ந்து தவிக்கின்றன.

தமிழ்பேசும் இந்துக்கள் இஸ்லாமியர் கிறுஸ்தவர்கள்...
தமிழ்கூறும் மண்பதியில்
அமைதியை இழப்பதற்கும் துருவங்கள் ஆவதற்கும்
அவர்களது வெறிகள்தான்...

தாங்கியது இனிப்போதும் தருமத்தின் வழிதன்னில்
தமிழ்த்தாய் பிரசவித்த
பொங்குதமிழ் ஜீவன்கள் பயணிக்கும் பாதையினில்
போட்டிடணும் தமிழ்பாலம்!

எட்டப்பர் புருட்டஸ்கள் அபூஜயில்கள் வாய்பிளந்து
எப்போதும் இருப்பார்கள்
கொட்டங்கள் அடங்கும்... காலம்வரின் அனைவருமே
கோதாவில் தலைகுனிவர்!

தங்குதடை இல்லாது பயணங்கள் தொடர்ந்திடணும்
தமிழ்என்னும் குடையின்கீழ்
சங்கமம் ஆகிவிடின்... சிந்திப்பீர் சகலருக்கும்...
சரித்திரப் பயணம் இது!



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# தேன் தமிழ் பாடுவோம்!

காலை மலந்துசெங் கதிர்கள் எறித்திடக்
கன்னித் தமிழ் மொழிந்து தினம்
கர்த்தன் வழிபடுவோம்!
மாலை மலர்ந்துவிண் மீனினம் பூக்கையில்
மனதில் நினைத்திருந்து - தமிழ்
மகிமைகள நுகர்ந்திடுவோம்!

தத்தித் தவழ்ந்துநா தட்டுத் தடுமாறும்
தங்கக் குழந்தைகட்கு - தேன்
தமிழினை ஊட்டிடுவோம்!
கத்திப் பறந்திடும் காக்கை இனத்திற்கும்
கன்னல் தமிழ் மொழியை - நாம்
கற்றுக் கொடுத்திடுவோம்!

செந்தேனும் நாவினில் சிந்திடும் போழ்திலும்
செந்தமிழ் மொழிந்திருந்து - தினம்
சிந்தை குளிர்ந்திடுவோம்
முந்தியே நம்மவர் முதுசுவை கண்டதும்
முத்தமிழ் மடிதனிலே - என்று
முழங்கியே பாடிடுவோம்!

வேற்று மொழிகளால் வீழ்வதோ நம்தமிழ்
வீரம் கொண்டஇனமே - தமிழ்
விவேகம் இழப்பதுவோ!
சற்றும் மறுவிலா தங்கத் தமிழ்எனும்
சங்கத் தமிழ்மொழியை எங்கணும்
சாற்றி முழங்கிடுவோம்!

# பூத்திடும் எதிர்காலம்

பார்வதி பாத்திமா புலோமினா மூவரும்
பக்கத்துப் பக்கத்துக் குடும்பங்கள் - என்றும்
ஓர்இனத்தவராய் தமிழ்என்னும் குடையின் கீழ்
ஒற்றுமை ஆகவே வாழ்ந்தனர்.

எத்தனை ஆண்டுகள் இவர்கள்தம் மூவரும்
எல்லோரும் பாராட்டும் படியாக - ஒன்றி
அத்தனை சீரோடும் சிறப்போடும் என்றென்றும்
அருமையாய் வாழ்ந்தவர் வந்தனர்.

உடன்பிறந் தவர்கள்போல் இமையும் விழியுமாய்
உயிராக வாழ்ந்திட்ட இவர்களின் - தொன்மைத்
தடயங்கள் இன்றுமே அழியாமல் ஒளிர்வதை
தொல்லியல் வரலாற்றில் காணலாம்.

பாலிகப் பருவத்தில் கல்விகள் கற்றிட
பள்ளிக்குச் செல்லுவர் ஒன்றாக - பின்னர்
மாலை ஆனதும் கோலிகள் விளையாடி
மணல்தனில் புரண்டெலாம் மகிழுவர்

மாமரத் தைக்கண்டால் பறித்தொரு மாங்காயை
மனமொத்துக் கடித்ததை உண்ணுவர் - இது
பாமரத் தனம்அல்ல அன்பின் வெளிப்பாடு
பாசத்தின் உச்சமும் தான்அது.

ஒருவருக் கொருவராய் உணவுகள் பரிமாறி
ஒன்றாக வேஇருந் துண்டணர் - குமருப்
பருவங்கள் ஆகியும் துருவங்கள் ஆகாமல்
பந்தத்துள் கட்டுண்டு மகிழ்ந்தனர்.

பூப்பெய்த போதும்தான் எல்லோரும் குடும்பமாய்
பொங்கிப் படைத்துண்டு மகிழ்ந்தனர் - அந்தக்
காப்பவிழ்ந் தழகுகள் கொட்டிடும் பாசத்தைக்
கண்டு மனங்கனிந் துருகினர்.

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

இரத்த நரம்புகள்
பிரச்சினை ஒருவருக் கென்றால் மற்றவர்
பின்நிற்க மாட்டார்கள் ஓடோடி - வந்து
ஆரெவர் சொன்னாலும் வாதாடிப் போராடி
அள்ளியே சொரிந்தனர் அன்பினை

இனம்மத பேதங்கள் என்றாலே தெரியாது
இல்லற பேதமும் கண்டனர் - பெற்றோர்
மனம்மகிழ்ந் துருகிடும் மக்களின் வாழ்கையில்
மலர்ச்சிகள் கண்டு மகிழ்ந்தனர்

இந்துசை வம்இஸ்லாம் கிறீஸ்துவம் என்றிவர்
இதமான தங்களின் மதங்களை - என்றும்
சிந்தையில் பூசித்துப் பேணியே வந்தாலும்
சொந்தங்கள் பந்தங்கள் சோராது

கோயில்கள் பள்ளிகள் ஆலயம் என்றிவர்
கூடியும் ஒன்றாகச் செல்லுவர் - பின்னர்
வாயிலில் வரும்வரை காத்துநின் றேபின்னர்
வந்ததும் ஒன்றாகத் திரும்புவர்

மதம்குலம் பேதங்கள் இவர்கட்குக் கிடையாது
'மனிதம்' ஒன்றேதான் இவர்களில் - ஒளிர்ந்து
இதமான சகவாழ்வை வளர்த்தே வந்தது
இவர்கள்தான் உண்மையின் இதயங்கள்!

ஒருவரை மற்றவர் உயர்த்தியும் தாழ்த்தியும்
ஒறுத்தும் நடந்ததே கிடையாது - உதவும்
பெருமனம் உள்ளத்தில் என்றென்றும் மூவரின்
பேச்சிலும் மூச்சிலும் ஒளிர்ந்திடும்

இப்படிப் பட்டவர் தான்இன்று நிலைமாறி
இங்கொன்றும் அங்கொன்றும் ஆயினர் - ஏனோ
எப்போதும் ஒன்றாக ஒன்றுக்கொன் றுதவிய
இமைகளும் விழிகளும் பிரிந்தன.

சிங்கத்தின் மதவெறிச் சீற்றத்தால் உயிர்களின்
சீரான வாழ்வியல் குலைந்தது - எங்கள்
பொங்கும் தமிழ் என்னும் குடையின்கீழ் ஒன்றிடின்
பூத்திடும் எதிர்காலம் போற்றிடும்!

# எங்கும் தமிழை எறியாதோ!

எந்தப் புதரில் வாழ்ந்தாலும் எனக்கென்று
ஏதும் இருப்பின் அதுஎந்தன்
சொந்தத் தமிழே அல்லாது இன்னொன்று
சொத்தென் றிருக்கச் சொல்வேனோ!

உந்தும் என்னின் உள்ள உணர்வெல்லாம்
ஒளிரும் தமிழால் அல்லாமல்
வந்த வாழும் எந்தஒரு மொழியாலும்
வழங்கப் பெற்று வாழ்ந்தேனோ!

பொன்னும் பொருளும் உலகின் மற்றெல்லாப்
புகழும் புலமும் இருந்தென்ன
கன்னல் தமிழின் சுவையின் பொருள்கண்டு
கலந்து இன்பம் எய்தக்கால்!

எல்லாம் இருந்தும் எதற்காக இதயத்தில்
இன்ப உணர்வைத் தருகின்ற
சொல்லாம் தமிழின் சுவைக்கு நிகரேதும்
சொல்ல உலகில் ஏதுண்டு!

அறிவை பண்பை அரியநல் ஞானத்தை
அழகாய்ப் பயின்று அணுவெனினும்
செறிவை என்னில் சேர்க்கின்றேன் என்றாலெம்
செந்தேன் தமிழின் சிறப்பன்றோ!

தன்னைத் தாயை தருமத்தை விற்கின்ற
தன்மா னத்தை இழந்தார்போல்
என்னைத் தமிழை ஈடாக்கி இழிவடையேன்
இரத்த தாயின் மீதாணை!

சாகும் போதும் சத்தியமாய் சொல்லுகிறேன்
சங்கத் தமிழை ஓதிஉடல்
ஏகும் போதும் என்னுயிர் பலவாகி
எங்கும் தமிழை எறியாதோ!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# அன்னைக்குப் பொன்முடி...!

வாருங்கடி தோழி வாருங்கடி இங்கே
வண்தமிழ் வாழ்ந்திடக் கொட்டுங்கடி
சேருங்கடி ஒன்றாய்க் கூடுங்கடி - எங்கும்
செந்தமிழ் வாழ்ந்திடச் செய்யுங்கடி!

கற்றுத் தெளிந்தஎம் தமிழ்அறி வாளர்கள்
காத்து வளர்ந்திட்ட செந்தமிழை
வற்றிப் போகாமலே வாழவைப் போம்என
வான்புக ழக்கொடி நாட்டுங்கடி!

காலம் வரும்என்று காத்துக் கிடப்பதால்
காரியம் ஏதும் நடப்பதுவோ!
கோலத் தமிழ்மொழி ஞாலத்தி லேவாழக்
கொட்டுங்க டிகையைத் தட்டுங்கடி!

எங்களின் தாய்மொழி காத்திடு வோம்தமிழ்
இலக்கியங் கள்தோறும் கற்றிடுவோம்
சங்கங்கள் கூடிக்கலை வளர்ப்போம் வாழும்
சத்தான நூல்களை ஆக்கிடுவோம்!

பள்ளிகள் தோறும் பரப்பிடுவோம் தமிழ்ப்
பற்றுகள் வளர்ந்திடப் பண்ணிடுவோம்
பிள்ளைகள் நாமும் தமிழ்வளர்ப்போம் எங்கள்
பின்னவர் வாழ்ந்திடச் செய்திடுவோம்!

கத்திப் பறந்திடும் காக்கை இனத்திற்கும்
கன்னல் தமிழினைச் சொல்லிடுவோம்
சத்தியத் தைப்பாது காத்திடுவோம் தமிழ்
சாகா நிலைபெறச் செய்திடுவோம்!

எத்தனை தொல்லைகள் இத்தரை மீதினில்
எதிர்த்தேதான் வந்திட்ட போதிலுமே
புத்தியுடன் செயல் ஆற்றிடணும் தமிழ்
பூமிஎல்லாம் சென்று ஏற்றிடணும்!

பெற்றதாய் ஊட்டிய பாலை மறந்திடப்
பேசுகின் றார்சில பெறியவர்கள்
சற்றும் அறிவில்லா அன்னவர்க் குத்தலை
சாயுவதோ தமிழ் ஓயுவதோ!

தாய்க்கு லமேஉந்தன் மானம் அழிந்துநீ
தரணியில் வாழ்ந்து பயனுமென்ன
சேய்க்குலத் தைச்சீறச் செய்திடணும் எங்கள்
செந்தமி ழைச்சிறை மீட்டிடணும்!

வெட்டிவெட் டிச்சதைத் துண்டு துண்டாகவே
வேறுவேறாய் எம்மை ஆக்கினுமே
அட்டியின்றி மானம் காத்திடு வோம்தமிழ்
அன்னைக்குப் பொன்முடி சூட்டிடுவோம்!



# இனியும் ஓய்ந்திருக்க இயலாது...

இனியும்நாம் ஓய்ந்திருக்க இயலாது
எண்ணிப் பாருங்கள்!
கனிகின்ற ஒருகாலம் வருமென்று
காத்துக் கிடப்பதனால்
தனித்தனியாய்க் கூறுபட்டுத் தளம்புவதைத்
தவிர்க்க முடியாது.

பிறந்தநாம் அடிமைகளாய் மடிவதற்கா
பெருமையுடன் இம்மண்ணில்
சிறந்திங்கு வாழ்வியலை அறம்பூக்கச்
சித்தரித்து வாழ்வதற்கும்
பிறந்தே நாம்வளர்ந்தோம் சரித்திரங்கள்
பிறழுதல் ஆகாது!

எங்களது வரலாற்றை எண்ணுங்கள்
இரண்டறக் கலந்திருந்து
மங்காது புகழ்பூத்த மனிதங்களை
மனத்திருத்தி இரைமீட்போம்!
தாங்கிச் சுமந்தபழி இனிப்போதும்
தருமம் தழைத்திடணும்!

தமிழென்னும் பால்நிலவின் சுகந்தத்தில்
தவழ்ந்து விளையாடி
அமிழ்துண்டு ஒரேகூட்டில் வாழ்ந்திட்ட
அணையாத பாசங்கள்
செமிக்காத மதம்பிடித்த ஜீவன்களின்
செயல்களால் சிதைவதுவா?

எங்களுக்குள் உருவான கசப்புகளை
இனிப்பாக்கி மீண்டும்நாம்
தங்கியொரு கூட்டினிலே வாழ்வதுதான்
தக்கஒரு வழியாகும்
பொங்குதமிழ் முழங்கட்டும் கைகோர்த்து...
புறப்படுவோம் இணைந்தொன்றாய்!

காலத்தைப் புரிந்துநாம் தொடுத்திடணும்
கடும்பயணம்... சிந்திப்பீர்!
ஏலத்தில் இடைநடுவில் கிடக்கின்ற
இனமல்ல எங்கள்இனம்
வேழம்போல் களத்தடிக்கும் ஓரினமாய்
வீறுநடை தொடுத்திடணும்!

“எங்கெங்கும் சுதந்திரம்” என்றுநாம்
ஏற்றுகின்ற ஒளிவிளக்கே
கங்குல் தனைப்போக்கி பிரகாசிக்கும்
கலங்கரை விளக்காகும்
மங்கலான கைவிளக்கு கடல்பயண
மார்க்கத்திற் குகந்ததல்ல...

தனித்தனி... என்கின்ற துண்டங்கள்
தமிழ்மண்ணில் ஆகாது
பனிப்போர்கள் இடையிடையே மூளுவதும்
பழிவந்து சூழுவதும்
இனிப்போதும்... இரண்டாகும் எண்ணங்கள்
இருப்பதையும் கெடுத்துவிடும்!

தாய்மொழியாய் தமிழ்மொழியை கொண்டவர்கள்
தமிழர்தான் அனைவருமே
மாய்வதற்கு எதுவும்இல்லை... இதைக்கேட்டு
மதங்கள் பிடித்தவர்கள்
மேய்கின்ற நுனிப்புல்லில் பசிதீர்ப்பின்
மெத்தவும் அழுந்திடுவீர்!

நெடுங்காலப் போராட்டம் தமிழ்பேசும்
நெஞ்சங்கள் ஒவ்வொன்றும்
சடுகுடு விளையாடி விலைபேசும்
சந்தர்ப்பம் இதுவல்ல...

இந்துக்கள் இஸ்லாமியர் கிறிஸ்தவர்கள்
என்கின்ற மதபேத
சிந்தனைகள்... இருக்கட்டும்! ஒருகுடைக்கீழ்
செயற்படுதல் முதல்வேலை

தமிழ்என்னும் மொழிஆளும் ஆட்சிவரின்
தவறவிடல் தப்பாகும்...
இமைபோன்றும் விழிபோன்றும் அதன்குடையில்
எல்லோரும் வாழ்ந்திடணும்

இதற்குள்ளே குழிபறிக்கும் எண்ணங்கள்
இருந்திட்டால்... குடைவீழும்
இதைஎண்ணி எம்மதத்து ஜீவன்களும்
இணைந்திடணும் ஒன்றாக!



# ஒளியை காண்கின்ற ஒருநாள்

என்னை "ஓர்இறைவன்" என்று எதற்காய்நீர்
எடுத்ததற் கெல்லாம் வாய்பிளக்கத்
தன்னை மறந்துநிதம் கூவித் தவிக்கின்றீர்
தான்செய் கின்றபிழை உணராமல்
என்னே இறைபக்தி! என்றன் கவலைகளை
எண்ணியும் பாராது உன்னையேநான்
இன்னும் படைக்கின்றேன் என்னைப் படைத்தவனின்
இதயம் எனக்குள்ளே இருப்பதனால்!

ஒன்றும் அறியாத பச்சைப் பாலியத்தை
உலகின் பல்வேறு மேதைகளாய்
என்றும் படைக்கின்றேன் எழுத்தை அறிவித்த
இறைவன் ஆனபல கதைகளைநான்
சொன்னால் என்துயரம் ஆறிப் போய்விடுமா
சொல்லி அழுகின்றேன் என்குறையை
என்னைப் பூசிக்கும் ஒருவர் எனைவந்து
"என்ன...?" என்றாதல் கேட்டதுண்டா?

கல்வி ஒன்றேதான் அறிவின் சொத்துஎன
கருதிப் படைக்கின்றேன், பிழைப்பிற்காய்
சொல்லிக் கொடுக்கவில்லை சொல்லிக் கொடுப்பதுஎன்
சொந்தக் கடமைஎன எண்ணுவதால்
அல்லல் படுகின்றேன் அதனால் என்ஆயுள்
அற்றுப் போனாலும் போகட்டும்
ஒல்லும் நின்வாழ்வில் ஒளியைக் காண்கின்ற
ஒருநாள்! அதுவேஎன் ஆதங்கம்!

உன்னைப் படைப்பதுநான் எதற்காய் என்றுஉனை
உணர்ந்து பார்த்தீரா? ஜீவனேநீர்
என்னைத் தவறாக உன்னைப் பார்ப்பவர்கள்
எண்ணித் திட்டுகின்ற துரதிஷ்டம்
உன்னால் வந்துவிடல் ஆகாது அதனால்தான்
உன்றன் வாழ்வியல்கள் ஒழுங்காக
என்றும் இலங்கிடணும் அதனைக் கண்டுபிறர்
என்னைச் சிந்திப்பர்... எண்ணிப்பார்!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

என்னைப் பூசித்து இமையத்தின் உச்சியிலே
ஏற்றிநீர் வைப்பதனால் பயனில்லை
உன்னில் இழைகின்ற "என்னைஉன் வாழ்வியலில்
உண்மைப் படுத்துவதே நீர்செய்யும்
கண்ணியம்" என்னிடத்து பெற்ற கல்வியினை
காலம் முழுவதுமாய் ஒழுகிவரின்
புண்ணியம் அதுவேஎன் கவலைகள் தீர்க்கின்ற
பூசைகள் ஆகும்நின் புகழ்பூக்கும்!

# படிப்புக்கள் இருக்கட்டும்

படித்துக் கொடுக்கின்ற வாத்தியார் - அந்தப்
பட்டத்திற் கொன்றும் குறையில்லை - மாதம்
முடித்துப் பெறுகின்ற சம்பளம் - என்
முந்தானைச் சேலைக்கும் போதாது!

அரிசியின் விலைஇன்று தெரியுமா? - சோறு
ஆக்கித் தெரிந்ததால் சொல்கிறேன் - என்னைச்
சிரித்துச் சிரித்துஏன் ஏய்க்கிறீர் - இந்த
சிங்கத்தின் ஆட்சியைக் கேளுங்க!

சீனியும் தேனீரும் இன்றியே - ஒங்க
சிந்தனை தான்சற்றும் ஓடாதே - இந்தக்
கூனியும் கருவாடும்... என்றுநாம் - நாளைக்
கொண்டு நடத்துவ தெப்படி?

காய்கறிக் கடையிலே தக்காளி - வெண்டி
கத்தரி போஞ்சிக்காய் இல்லையா - மச்சான்
போய்வாங்கி வாருங்க சீக்கிரம் - இப்போ
பிள்ளையும் வந்திடும் சமைக்கணும்

கைத்தறிச் சேலைபா வாடைக்கு - ஒங்க
கால்சட்டைக் கும்சீலை வாங்கணும் போய்
பார்த்திட்டு வாருங்க அவசரம் - உங்க
படிப்புகள் இருக்கட்டும் எழும்புங்க!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# இதயமே உன்னை அழைக்கின்றேன்!

எதிர்கால மென்கின்ற இனியதோ ருலகத்தை
எண்ணிப் படைக்கின்ற இதயமே - நீ
புதிதாகப் படைக்கின்ற உலகத்தில் என்னென்ன
புதமைகள் செய்குவாய் புகன்றிடு!

ஆயிரம் எண்ணங்கள் கொள்கைகள் என்றிங்கு
ஆட்டிப் படைக்கின்ற இதயமே - பழம்
பாயிரம் சொல்வதிற் பயனொன்று மில்லையுன்
பாதையில் புதுமைகள் சேர்த்திடு!

பாட்டிகள் சொல்கின்ற பரம்பரைக் கதைகளைப்
பற்றிச்செல் கின்றவீண் இதயமே - உன்னை
வாட்டிடும் காலத்தின் கோலத்தை மாற்றாமல்
வருங்காலம் மலருமோ சொல்லிடு!

உள்ளத்தில் அறிவென்னும் ஒளிமங்கிப் போனதால்
உண்மையும் செத்ததே இதயமே - அந்த
உள்ளத்தில் உண்மைகள் ஊமையாய் போனதால்
உலகமே கெட்டது உணர்ந்திடு!

அறிவென்னு மாயுதம் ஒன்றேயிவ் வுலகத்தின்
அச்சாணி என்பதை இதயமே - உன்
பொறியென்னு மைந்துக்குள் ஒளிர்கின்ற போதுதான்
புதுமைகள் பூத்திடும் புரிந்திடு!

இதயமே உன்னைநான் எண்ணியே சாகிறேன்
எதிர்காலம் உன்னிடம் இருப்பதால் - நீ
உதயபான் எறிகின்ற ஒளிஎன்னும் கீற்றினில்
ஓடியே வந்திடு அழைக்கிறேன்!



# சட்டி இறைச்சியின் சப்தம்...!

எனக்கு
எங்கே கிடைக்கும்
எப்போது கிடைக்கும்
அது
எவனுக் குரியதாய்
இருந்தால் எனக்கென்ன...!

என்று
நேற்றுவரை இருந்த
நெடுநாள் ஆசைதனை
நான்
நெஞ்சுள் இரைமீட்டி
நிறைவேற்றத் துணிந்து...


மெதுவாய்
அக்கம்பக்கம் பார்த்து
அடிஎடுத்து வைத்து
பைய
முன்கதவைத் தள்ளி...
முயற்சிகள் பலிக்காமல்...

திரும்பி
பின்கதவால் நுழைந்து
பெருமிதம் கொண்டு
அங்கு
உள்ளிருந்த சட்டிகளை
உற்றுஉற்றுப் பார்த்து...

அடுப்பில்
இறைச்சிக் கறிஇருந்த
இரும்புச் சட்டிதனைக்
கண்டதும்
தன்னை மறந்து
தலையை உள்ளேவிட்டு...

எடுத்த
இறைச்சித் துண்டுபோதும்
என்றுநான் எண்ணாமல்
பேராசையில்
சட்டியை இழுத்துநான்
சண்டியன் ஆவதற்குள்

கறிச்
சட்டிஇழு படுகின்ற
சத்தத்தைக் கேட்டதுமே
கொள்ளிக்
கட்டைஒன்று பறந்துவர
கண்விழித்தேன் நல்லவேளை...!



# பற்றி எரிகின்றேன்...!


எனக்கோ பலபேர்கள் இருக்கின்றார்... அவர்கள்
என்மேல் வைத்திருக்கும் காதலுக்கு அளவில்லை
சனங்கள் மத்தியிலும் எனைப்பிடித்துக் கொஞ்சி
சரசம் பண்ணாமல் எவரும் செல்லார்கள்!

என்னில் இச்சைகொண்டு அனுபவிக்க எண்ணுகின்ற
எத்தனையோ பெரியவர்கள் வாலிபர்கள் தலைவர்கள்...
என்றுநான் அத்தனை பேர்களையும் பார்க்கின்றேன்.
என்னை இழப்பதற்கு எவருக்கும் மனமில்லை

பணத்தில் புரள்கின்ற பெரியஒரு மனிதர்எனைப்
படுத்துகின்ற பாடுகள்... கொஞ்சமல்ல என்தன்
மணத்தில் மோப்பம் பிடித்துஅவர்... படுக்கின்ற
மஞ்சத்தில் சாய்ந்து பால்அருந்தி எனைப்பார்த்தார்!

நடுக்கம்... எனக்கவரில் நாட்டமே கிடையாது
நக்கத் துடிப்பது அவர்தான்... இரவுஅவர்
படுக்கப் போகுமுன்னே பையவே கைபோட்டு
பற்றிஎன்னை இழுக்கின்றார்... அகப்பட்டு பதறுகிறேன்...

அழகையும் கெடுத்தும் எரித்தும் எனைப் போட்டு
அவர்தன் காலாலும் மிதித்துவிட்டு அயர்ந்தார்...
பழகப்போய் பட்டுத்தேறியும் பயனில்லை
பாழும் "சிகரெட்" டாய் ஏன்தான் பிறந்தேனோ...!
பற்றி எரிகின்றேன்...



# கள்ளுண்ணும் பக்தர்கள்

மதங்கள் என்பவை வாழ்வியலைப் பதமாக்கும்
மகத்தான மார்க்கங்கள்...
இதங்கள் புரியாமல் அவற்றினை வெறியாக்கி
இகத்தினைக் குழப்புவதா?

பல்வேறு கலாசாரம் அவரவர் வாழ்வியலில்
பண்பாட்டை வளர்ப்பவையே...
செல்லும் பாதைகள் வெவ்வேறு... இதைவைத்துச்
சிண்டுகள் மூட்டுவதா?

இதயத்தில் முகிழ்கின்ற எண்ணங்களை வெளிக்கொணரும்
இதமான மொழிவழியை
பதமான மனிதத்தைக் கூறாக்கப் பயன்படுத்தி
பதம்பார்க்க எண்ணுவதா?


வாழ்வியலின் தேவைக்காய் - தீனிக்காய் மேற்கொள்ளும்
வகைவகைத் தொழில்வழியில்
தாழ்வுகள் உயர்வுகள்... என்று தரம்பிரித்துத்
தன்பண்பை இழப்பதுவா?

முன்னவர்கள் சொன்னார்கள் - பின்விளைவை எண்ணாமல்
மூளைகளில் பட்டவற்றை
என்பதனால் அவற்றையெல்லாம் இறையின் மரபுகளாய்
எண்ணியே வளர்ப்பதுவா?

குலங்களும் சாதிகளும் கோத்திரமும் பல்வகைக்
குடிவழியும் வாழ்வியலில்...
தலையெடுத்து மனிதத்தைத் தகர்த்து நொறுக்குவதால்
தருமங்கள் தழைத்திடுமா?

வாழ்வியலை வளமாக்க அறம்பூக்கும் அரசொன்றை
வளர்ப்பதுதான் கட்சிநெறி
பாழ்படுத்தி கட்சிகளால் மனிதங்களைப் பகடைக்குள்
பலியாக்கி ஆடுவதா?

மனிதத்தைக் கண்டபடி துண்டாடி வளர்த்துவரும்
மரபுவழிச் சுவடுகளின்
பனிமலையில் கள்ளுண்ணும் பக்தர்கள்... மனிதத்தைப்
பதப்படுத்தும் பயணம்தேவை!



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# சுகந்தம் என்னே சொல்வேன்!

பொழுது சாயும் வேளை
பொன்னாய் ஒளிரும் மாலை
அழுது தேடி அவள் வந்தாள் - என்னை
ஆரத் தழுவி முத்தம் தந்தாள்!

மலையின் சாரல் பக்கம்
மறுகி விடலாம் என்று
காலைத் தூக்கிவைத்துச் சென்றேன் - அந்தக்
கள்ளி முன்னே வந்து நின்றாள்!

இரையும் கடலின் ஓரம்
இறங்கிப் பதுங்கி நிற்க
கரையும் விடாமல் வந்து என்னை அள்ளிக்
கட்டித் தழுவச் சொன்னாள் தன்னை!

வீடு நோக்கி ஓடி
விடலாம் என்று நாட
கூடவந்து பின்னால் தொட்டு என்னைக்
கூட நினைத்தாள் அந்தச் சிட்டு!

வாசல் உள்ளும் வந்து
வஞ்சி என்னைக் கொள்ளும்
ஆசை எல்லை மீறக் கண்டேன் - அவள்
ஆடும் வேஷம் கண்டு கொண்டேன்.

மெள்ளக் கதவைத் தள்ளி
மெதுவாய் உள்ளே சென்றும்
கள்ளி என்னைவிட வில்லை... தென்றல்
காற்றின் சுகந்தம் என்னே சொல்வேன்!

# ஏனிந்த மோகம்?

மல்லிகை மொட்டந்த மங்கை - அவள்
மாந்தளிர் மேனிக்கு இருக்கின்ற சங்கை
அல்லிக் குளத்தினில் வாழும் - அந்த
அன்னத்துக் கென்மீது ஏனிந்த கோபம்?

காந்தள் ஒளிர்கின்ற கண்கள் - அந்தக்
கண்பட்ட வேகத்தில் நான்பட்ட புண்கள்
கூந்தல் சுருள்கின்ற மேகம் - அந்தக்
கோதைக்கு என்மீது ஏனிந்த மோகம்?

கொவ்வைப் பழத்தினை வெல்லும் - அவள்
கொங்கையோ காதல் மனங்களைக் கொல்லும்
செவ்வாய் திறந்தாலே போதும் - அந்தச்
சித்திரச் சோலைக்குள் சேர்ந்திடும் யாதும்!

கன்னிப் பருவத்துப் பெண்ணாள் - பெண்மை
கனிகின்ற போதின்னும் ஏதேதோ சொன்னாள்
என்னில் எதைக்காணு கின்றாள் - அவள்
இதயத்தில் வைத்தென்னை ஏன்பேணு கின்றாள்?

ஒருநாள் அவள்வந்து என்னை - "தங்கள்
ஊமைக்குப் பொருளென்ன?" - என்றவள் தன்னை
ஆருமே அறியாமல் கேட்டாள் - அந்த
அழகென்னும் மயிலென்னில் காதலைப் போட்டாள்.

இணையாகும் உணர்வொன்றிப் போனேன் - அவள்
எழிலுக்குள் தேனுண்ணும் வண்டாகிப் போனேன்
துணையாகித் துவள்கின்றாள் என்னில் - அந்தத்
தோகைக்குள் சிக்கித் துடிக்கின்றேன் மண்ணில்!



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# தூது

தேன்சிந்தும் மலர்தொங்கும் சோலை - எங்கும்
தேடுகிறேன் செவ்வந்தி மாலை
மன்னன்போல் வருவானென் காளை - எந்தன்
மைக்கன்னந் தொடுவானோ நாளை!

வண்டென்னும் பறவைகள் கூட்டம் - காதல்
வாழ்வினில் அவைகொள்ளும் நாட்டம்
கொண்டவன் தரானோஅவ் வூட்டம் - என்னில்
குறையாதோ துயரென்னும் வாட்டம்

பருவத்தால் துடிக்கின்ற உள்ளம் - அதில்
பாய்கின்ற அன்பென்னும் வெள்ளம்
அருந்தக்கால் இனிஎன்ன கள்ளம் - இனியும்
ஏகாதோ வாழ்வென்னும் வள்ளம்?

உணர்வின்றி உயிர்தேடி வந்தேன் - இங்கண்
உணர்வின்றி உடல்வாடு கின்றேன்
இணையின்றி இடம்தேடி வந்தேன் - மன்னன்
இதயத்தில் நானாகி நின்றேன்!

பண்பாடும் பறவைகாள்! விண்ணில் - கூடிப்
பறக்கின்ற மேகங்காள்! மண்ணில்
பெண்பாடும் துயரங்கள் பெய்து - எந்தன்
பிரியனின் பதில்கொண்டு எய்து!



# என்னை விட்டுவிடு!

என்றன் உணர்வுதனை எவளோ ஒருத்தி வந்து
இழுக்கும் வேதனையால் எண்ணி - முதல்
என்றும் இல்லாத அந்த வேதனையில்
"என்னை இழுப்பதுயார்?" என்றேன்.
சென்று சிலகவடு முன்னே நின்று எழில்
செவ்வி கஞ்சமகள் பெண்ணாய் - எனைக்
கொண்டு செல்வதற்கு கொவ்வை இதழ்பூத்துக்
கொடிபோல் துவண்டாடி நின்றாள்!

"கண்ணே!" என்றவளை "என்னைத் தழுவவரும்
காரணம் யாது?" என்று கேட்க - அவள்
"விண்ணே விசும்பிலுனை அழைக்க வந்துஉளேன்
விரைந்து வந்துவிடு!" என்றாள் - நான்
"மண்ணில் வதிகின்ற ஜீவன் ஒன்றாதல்
மறுகல் முடிந்திடுமோ உன்னால் - உனை
எண்ணும் போதுமனம் ஏங்கித் துடிக்கிறதே
என்னை விட்டுவிடு!" என்றேன்

"எத்தனை காலங்கள் இனிதாய் வாழ்ந்தென்ன
இறுதியில் நீயன்றோ தஞ்சம் - நின்
சொத்தாய்ப் போனபினே யாக்கை விரும்புவரோ
சொந்தம் தனக்கென்று ஏது - உன்னை
எத்திப் பிழைக்கின்றார் எவரும் இல்லையெனில்
எதற்காய் வருத்துவது என்னை - உயிர்
பித்துப் பிடித்துஒரு பெண்ணாய் வந்துஎனை
பின்னால் அலையுவது ஏனோ?"

"என்னைத் தருகிறேன் இன்னும் சில நாட்கள்
இரக்கம் கொண்டுஎனில் செல்லும் - உயிர்
தன்னைத் தந்துவிடும் தயக்கம் எனக்கில்லை
தாங்கிச் சுமந்தஉல கிற்கு - பணி
இன்னும் சிலசெய்து... என்னைத் தருகின்றேன்
இன்று விட்டுவிடு அன்பே - உயிர்
தின்னும் வெறிகொண்டு தீயோர் பலர் வாழத்
தேடி எனைவருதல் ஏனோ?"

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

"பெண்ணாய் வந்தவளே உன்றன் பெரழகில்
பின்னால் வராதவரும் உண்டோ - என்
கண்ணே என்றாதல் உன்னை அடைகின்றேன்
காலம் வந்தவுடன் கொள்ளும் - என்
எண்ணம்... இலட்சியங்கள்... இன்னும் சிலஉண்டு
என்னை விட்டுவிடு இன்று - இம்
மண்ணில் தஞ்சமென வாழும் மனிதர்களை
மறந்து எனைவருத்தல் முறையோ?"

"பிறந்த பொன்னாடு பேசும் அன்னைமொழி
பேணும் வித்தைகளைச் சொன்ன - என்
சிறந்த அன்னையவள் இறுதி ஆசைகளில்
இன்னும் இருக்கையிலே என்றன் - உயிர்
கறந்து சென்றிடநீ கன்னிக் குமரியாய்நீ
காதல் கொண்டு எனில் தங்கி - பின்
பறந்து சென்றிடவோ பார்வை தொடுக்கின்றாய்
பாவாய் உனைவென்று வாழ்வேன்...!"

# என் விருப்பம் இறவாது வாழுவதே...!

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

ஆராரோ ஆரிரரோ
அன்பில் விளைந்தமுதே
பாருக்கு ஒருமகனே
பாலகனே நித்திரசெய்!

பொன்னே புதுமலரே
பூத்துவந்த சேய்மலரே
கண்ணேஎன் கனிரசமே
கற்பகமே கண்வளராய்!

கன்னம் சிவந்தமுத்தே
கலைவளமே கண்மணியே
சின்னஎன் மகனாரே
சீராளா செப்புகிறேன்...!

உன்னை எதிர்பார்த்து
உலகமொன்று காக்குதடா
முன்னே பணிசெய்யும்
முழுநிலவே கண்வளராய்!

தாயாக நான்பிறந்தேன்
தவக்குலமே சொல்லுகிறேன்
சேயாக நீபிறந்தாய்
செப்புவதை செய்திடுவீர்!

வண்ண மகனேஎன்
வயிற்றின் கனியமுதே
எண்ணும் எழுத்துமின்னும்
என்அறிவும் தந்திடுவேன்!

அஞ்சாதே என்மகனே
அறிவுகள் மழுங்கிவிடும்
நெஞ்சாரக் கூறுகிறேன்
நெறிதவறி வாழாதே!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

## இரத்த நரம்புகள்

மந்த குணம் இல்லாமல்
மனிதனாக வாழ்திடனும்
எந்தன் இனக்கொழுந்தே
எதிர்கலாம் அழைக்குதடா!

எப்படியும் வாழ்ந்திடலாம்
என்றஎண்ணம் தப்பாகும்
இப்படித்தான் வாழ்வதென
இதயத்தில் கொள்ளுமாடா!

நிலையான கொள்கைஒன்று
நெஞ்சில் இருந்திடனும்
தலையாய் அதுவிளங்கத்
தலைமகனே செய்திடுவாய்!

திசைதெரியாக் கப்பலைப்போல்
திக்குமுக்கு ஆடாமல்
அசையாது இலட்சியத்தை
ஆக்கிடுவீர் என்மகனே!

ஊரார் கதைத்திடலாம்
உற்றவரும் சோர்ந்திடலாம்
சீரான உன்செயலைச்
சீ... என்றும் வீசிடலாம்

குற்றம் புரிவோர்கள்
குறுகுறுப்பர் என்மகனே
சற்றும் சளைக்காமல்
சாற்றிடவே கண்வளர்வாய்!

புத்திவரும் முன்னேஇங்கு
புலம்புவதில் என்னபலன்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
சண்டாளர் உலகமடா

சொன்னவைக ளைக்கேட்டு
சுறுசுறுப்பு மாறாமல்
தன்னைத் தயார்படுத்து
தலைநிமிர்ந்து நில்லுமடா

பிறந்த பெருமைகண்டு
பிரதிபலன் செய்யாமல்
இறந்தமனு கோடியடா
என்மகனே உன்விருப்பம்...?

இறவாமல் வாழுவதே
என்விருப்பம் சொல்லிவிட்டேன்
மறவாமல் தாய்நாடு
மக்களுக்காய் வாழ்ந்திடுவீர்!



# அகதிகள் அவலம்

அகதிகள் பாரும் அம்மா - எங்கள்
அவலங்கள் கேளும் அம்மா!

அன்னையும் இல்லை தந்தையும் இல்லை
ஆதரிக்க நல்ல மனிதரும் இல்லை
என்னதான் பாவங்கள் செய்தோமோ இந்த
ஏழைகள் படுகின்ற துயரங்கள்... பாரீர்!

குண்டு மழைகளும் ஏவு கணைகளும்
குடித்திட்ட உயிர்கள் ஒன்றா இரண்டா...
கண்டதும் இல்லை பெற்றோரின் முகங்கள்
கண்கள் செய்திட்ட பாவங்கள் ஆமோ!

அடுத்தடுத் தாகநாம் குடும்பமாய் வாழ்ந்தோம்
அவர்இவர் என்கின்ற பேதங்கள் இன்றி...
படுத்துநாம் எழுந்ததும் ஆள்ஆள் முகத்தைப்
பார்த்தும் விழித்தும் பழகினோம் உயிராய்...

இடையினில் புகுந்திட்ட நச்சுப் பாம்புகள்
இனங்களுக் குள்ளே விஷங்களைக் கக்கித்
தடைகளைப் போட்டதால் நடைகள் மெலிந்தன
தருமங்கள் அழிந்தன... கறுமங்கள் பாரீர்!

இமையும் விழியுமாய் வாழ்ந்திட்ட குடும்பங்கள்
எதிரிகள் விரித்த சூழ்ச்சி வலைகளில்
அமைதிகள் இழந்துநாம் சிக்கித் தவிக்கிறோம்
ஆண்டவன் கட்டளை என்பது ஆமோ!

இந்துவாய்ப் பிறந்து வளர்ந்தது தவறா?
இஸ்லாத்தில் பிறந்து வாழ்வது தவறா?
செந்தமிழ் மொழியும இனங்களுக் குள்ளே
சீண்டி விட்டதால் ஆண்டிகள் ஆனோம்!

பௌத்தம் இந்து இஸ்லாம் கிறிஸ்துவம்
பக்குவம் ஆனநல் மதங்கள் ஒளிர்ந்தும்
சத்தியம் அழிந்து போவது ஏனோ!
சக்திக்குள் விழுந்த அகதிகள் ஆனோம்

மதங்களின் பிழையா மனிதரின் பிழையா
மொழிகளின் பிழையா வழிகளின் பிழையா
இதயங்களே கொஞ்சம் இறங்கிப் பாருங்கள்
இனங்கள் படுகின்ற துயரங்கள் அன்றோ!

ஒருவரை ஒருவர் மதித்திடும் பண்புகள்
உள்ளத்தில் இருண்டு போனதால் இந்தக்
கறுமத்தைச் சுமக்கும் பலிக்கடா ஆனோம்
கல்வியும் செல்வமும் இருந்துதான் என்னே!

மனிதங்களே கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்!
மனிதனை மனிதன் வருத்துதல் முறையா?
இனிவரும் காலங்கள் ஆவது மலர்ந்திட
இதயங்கள் யாவும் ஒன்றிடல் வேண்டும்!
இதயங்கள் யாவும் ஒன்றிடல் வேண்டும்!



கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

# மனிதத்தை உயிர்ப்பிக்க மாட்டாய்!

இந்த அறிவியல் யுகத்திலும்
இழிவாரச் சிந்தனைகள் உனக்கு!
மந்த புத்தியைப் புடம் போடும்
மனிதம் உன்னுள் ஒளிரட்டும்!
இந்த பிரகாசம் இல்லையெனில்
இருள் அடைந்த பயணம் தான்...

ஒவ்வொரு நாளும் உன்னை நீர்
உயர்த்த எடுக்கின்ற முனைவுகள்
ஒவ்வொன்றும் இமயத்தின் உச்சியில்
உன்னை ஏற்றவும் கூடும்...!
எவ்வாறு அதனில் ஏறினீர் என்பது
எனக்குத் தெரியாதா என்னே!

உச்சத்தில் ஆடுகின்ற உன்றன்
ஊழைச் சதைகளில்... அழுகிய
எச்சங்களும் இருக்காது... கீழே
இறங்கியே ஆக வேண்டும் ஒரு நாள்!
அச்சமற்ற நீவிர் நிச்சயம்
அறுவைச் சிகிச்சைக்கு ஆளாவாய்!

பொருள்கள் செல்வங்கள்... பலவும்
பெற்றுப் பிரகாசிக்கும் உனக்குத்
தெருக்கள் தோறும் புகழ்... மாலை...
தாளங்கள்... இவைகள் உன்றன்
பெருமைப் படுத்தும் பூதங்கள்
பெருச்சாளிகள் பலவும்... உனக்குப் பக்கபலம்!

கல்விகள் ஞானங்கள் கற்றுள்ளீர்
காரியத்தில் இல்லை அவை!
நல்ல பதவிகளை பெற்றுள்ளீர்
நன்மைகள் இல்லை... பொருள்
செல்வம் நிறையப் பெற்றுள்ளீர்
சிறிதுமே உதவுதல்... இல்லை!

இங்கண் ஒளிரும் மனிதத்தை
இருபது முப்பது துண்டுகளாய்
பங்குகள் போட்டு சாதிகுலம்
பட்டங்களும் சூட்டிப் பறை அறைந்து
சங்குகள் முழங்கும் சரித்திரங்கள்
சமாதிகள்... கண்ணுக்குள் ஏராளம்!

உண்மை உழைப்பு உயர்வு
உள்ளத்தில் கிடையாது உனக்கு!
கண்களைக் குருடாக்கி நம்பியவன்
கழுத்தை அறுக்கும் நீவிர்
மண்ணுள் புதையும் போதும்
மனிதத்தை உயிர்ப்பிக்க மாட்டாய்!

# பக்தர் மீண்டும் பயணம்...!

மகாபோதி மரத்தடியில் தியானம் செய்த
மகான்புத்தர் பௌத்தமத தத்துவங்கள்...
இகம்வாழும் தம்மக்கள் வாழ்வில் காண
எண்ணிஒரு பௌத்தபக்தர் நடந்து சென்றார்

பாதைகள் பக்கமெலாம் பசுமை பொங்கும்
பாலாகத் தேனாக... பாயும்என்று
வீதிதோறும் நடந்துசென்ற பௌத்த பக்தர்
விதவிதபல் கோலங்களை கண்டுசென்றார்

இடையிடையே விகாரைகள் ஒளிரக் கண்டு
இதமான பக்தி வெள்ளம் அனைத்திலுமே
மடைதிறந்து பாய்வதையும் கண்டு பக்தர்
மனம்குளிர்ந்து நடந்துவெகு தூரம்சென்றார்

புத்தர்தனை வணங்குகின்ற மக்கள் வெள்ளம்
பூரித்து மகிழ்கின்ற காட்சிகண்டு
பத்தியங்கள் காத்துவரும் பௌத்த பக்தர்
பக்தியுடன் பாதைஎங்கும் நடந்துசென்றார்

"அன்புஎன்றும் கருணைஎன்றும் தருமம் என்றும்
அருள்பொழியப் போதித்தார் எங்கள்வள்ளல்
மன்னுயிர்கள் வதைகளையும் வெறுத்தார்" என்று
மனமுருகும் ஓதைகளும் கேட்டுச்சென்றார்!

சின்னஞ்சிறு பறவைகளும் கூடக் கண்ணீர்
சிந்துவதைப் பொறுக்காத பக்தர் கூட்டம்
என்புருகச் "சரணமாம் சரணம்" என்று
எங்கணுமே துதிப்பதையும் கண்டு சென்றார்

பக்திமிக்க தன்மக்கள் பாசம் கண்டு
பால்போன்று மனம்பொங்கி மகிழ்ந்து சென்ற
சக்திமிக்க பக்தர்பெரு மானின் பார்வை
சாலையொன்றின் மூலையிலே விழுந்த போது...

அப்படியே மலைத்துப்போய் இடி விழுந்த
அதிர்ச்சிதரும் காட்சிஒன்றைக் கண்டார்... "அந்தோ
இப்படியா என்மக்கள்...?" என்று வென்று
இதயத்தை இரும்பாக்கித் தொடர்ந்து சென்றார்

ஒருதொகுதி மனிதர்களை வதைகள் செய்து
ஒதுக்கியழிக் கின்றசதி வலைகள்பின்னி
தெருவழியே கோசமிடும் கூட்டம புத்தர்
தனின்படத்தை ஏந்துநிற்கும் காட்சிகண்டார்...

"புத்தமும்சிங் களமும்தான் இந்தத் தீவின்
பூர்வீகச் சொத்துக்கள்... மற்றை எல்லாம்
சொத்தைகளும் சோடைகளும்..." என்று பாடிச்
சுருதிகிளப் பும்அவர்கள் சூறைக் கண்டார்!

தமிழ்மொழியும் சிறுபான்மை மக்கள் தன்னின்
தனித்துவங்கள் உரிமைகளைத் துவம்சம்செய்யும்
திமிர்பிடித்த சிங்கங்கள் கர்ச்சிக் கின்ற
திசையெல்லாம் பார்வைகளைச் செலுத்திச் சென்றார்

"கலப்பற்று இத்தீவில் சிங்கம் ஒன்றே
காலமெல்லாம் கோலேச்ச வேண்டும்" என்ற
தலைகளது நெருப்புளால்... மக்கள் வெந்து
தருமங்கள் குழம்புவதைக் கண்டுசென்றார்.

ஒன்றாக வாழ்ந்திட்ட உறவும் கெட்டு
ஒப்பரிய வாழ்வியலின் ஒழுங்கும் கெட்டு
தொன்மைமிகு பரஸ்பரங்கள் துவம்சம்ஆகித்
தூள்ஆகிச் சாம்பர்களும் பறக்கக் கண்டார்....

சாம்பர்குவி மேடுகளும் கபுறுஸ் தானம்
சமாதிகளும்... எழுதாத சரிதை எல்லாம்
நம்பவுமே முடியாத நிகழ்வு தன்னை
நடந்தவாறே கண்டுமனம் நொந்து சென்றார்

பாதைதனில் மறுபக்கம் திரும்பி னார்கள்
பதாதையுடன் பௌத்தமத பிக்குமார்கள்
ஓதைகளைக் கேட்டதும்இடி விழுந்த வர்போல்
ஒதுங்கிஒரு புறமாக வெதும்பி நின்றார்

புத்தமகான் பௌத்தமத தத்து வங்கள்
புரியாமல் வழிதவறி புலம்பும் மாந்தர்
புத்திகளைக் கண்டதுமே பௌத்த பக்தர்
புழுங்கிமனம் வெதும்பி.. திரும்பி வந்து

மகாபோதி மரத்தடியில் ஞானம் பெற்ற
மகாபுத்தர் சுருதிகளை உரத்து மீட்டி
பகைபோக்கி மண்மனுக்கள் வாழ மீண்டும்
பயணத்தைத் தொடர்ந்திட்டார்... பௌத்த பக்தர்!



# ஒதுங்கி மறுகுவதேன் ஓரம்போய்?

இன்னும் எதற்காக மௌனியாய் இருக்கின்றீர்
இனியஎன் ஜீவனே உன்னைத்தான்...!
பின்னால் நீதிரும்பி கடந்துவந்த பயணத்தின்
பாதச் சுவடுகளை எண்ணிப்பார்!

திசைகள் புரியாமல் மனம்போன பாதைகளில்
திக்குகள் தடுமாறித் திரிந்திட்டீர்
வசைகள் பலவற்றை வழிநெடுகக் கேட்டும்நீர்
வழிகள் தவறியே சென்றிட்டீர்!

சென்ற பாதைகளில் நீர்கண்ட மனிதங்கள்
சிந்திய இரத்தக் கண்ணீர்கள்...
ஒன்றும் தெரியாத வன்போல கண்டும் நீர்
ஒதுங்கி மறுகுகிறீர் ஓரம்போய்!

"எவனெவன் செத்தால் எனக்கென்ன" என்றுநீர்
ஏறினாய்... இயலாமல் இறங்கினாய்
சவங்கள் புதைந்த சமாதிகளைக் கண்டதும்தான்
சாகாத வரம்கேட்டுச் சலிக்கின்றீர்!

கறைகள் படிந்தநின் பயணத்தின் சுவடுகளை
கணக்கிட்டுக் கண்ணீர் வடிக்கின்றீர்
சிறையில் கிடக்கும் கைதியின் நிலைபோல
சிந்திக் கின்றீர்நீர் இப்போது!

பட்டுத் தேறினால்தான் பாடம் புரியவரும்!
பயணம் அதுவல்ல... சிந்திப்பீர்!
கெட்டுப் போகாமல் ஜீவனே இனியாதல்
கேடுகள் வருதற்கு முன்னேநீர்

உன்னை நம்பிய ஏங்கிய மனிதங்களை
உதாசீனம் செய்துநீர் சென்றிட்டாய்!
சென்றதால் எந்தஒரு பயனையும் கண்டதில்லை
சமாதிகளைக் கண்டு சலித்ததுதான்!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

"அன்பேஎன் ஜீவனே அழைக்கிறேன் உன்னைநான்
அழகான பயணங்கள் தொடுத்திட...
இன்பங்கள் மக்களின் வாழ்வினில் இழைத்திட
இங்கண் நம்பிநீர் எழுந்துநில்!"

தன்னலம் அற்றஒரு சமுதாயம் தழைத்திட
தருமங்கள் செழித்திட மன்பதை
என்னதான் நேர்ந்தாலும் விழித்திடச் செய்குவோம்
எழுச்சிகொள் ஜீவனே ஏறிவா!

ஒற்றுமையின் வழியினில் சமத்துவம் ஓங்கிட
ஒல்லும் மனிதங்கள் ஒளிர்ந்திட
பற்றுடன் சகோதர பாசத்தை வளர்த்திடும்
பக்குவம் பூத்திடப் பண்ணுவோம்!

இலக்குகள் இல்லாத பயணங்கள் தொடர்ந்ததால்
இருளுக்குள் சிக்கிநீர் தடுமாறிப்
பலவழிப் பாதைகள் சென்றதால் கனவுகள்
பலவாகிப் போனதை எண்ணிப்பார்!

சர்வமும் மனிதங்கள் சமத்துவம் ஆகினால்
சாந்திகள் சமாதானம் சந்தோஷம்
கர்வங்கள் களைந்து மக்கள் விழித்தெழக்
கண்கள் திறந்திடக் கரைந்தெழு!

# சாரதா மாமியை பார்த்துக்க!

"அண்ணே! உங்களைத்தான் கேட்கிறேன்
அன்னம்மா வின்வீடு இதுதானோ?"

"கண்ணில் பூப்போட்ட அவள்அதோ
கல்லிலே குந்திக் கிடக்கிறாள்!"

"தவறாக எனைநீங்கள் எண்ணாமல் அவள்
தாயினை ஆரென்று சொல்லுங்க"

"அவளை கேட்காதே தம்பிநீ
ஆறேழு வருஷமாய் அழுகிறாள்"

"எதற்காக அழுகிறாள் என்பது
எனக்கும் தெரியும்தான் அதனால்தான்"

"பதறிப்போய் நீவந்து நிற்கிறாய்
பக்கத்தில் வந்திங்கே பார்தம்பி!"

"அடடா அன்னம்மா தாயேதான்
ஆறேழு வருடங்கள் கண்டுநான்"

"எடக்கு முடக்காக ஏதேதோ
எண்ணுகின் றாய்தம்பி ஆருநீ?"

"அவளுக்கும் தெரிந்தவன் என்பெயர்
அலாவுதீன் என்றென்னை அமைப்பார்கள்"

"சுவருக்கும் காதுண்டு அவள்ஒரு
சுடுமூஞ்சு என்றாலும் நல்லவள்"

"அன்னம்மா வும்நானும் அவள்தாயும்
அகதிகள் முகாமிலே இருக்கையில்"

"என்னதான் நடந்தது என்பதை
என்னிடம் சொல்லவா இனிவேண்டும்"

"எப்படி யாதல்என் அன்னம்மா
எனக்கே ஆகணும் இல்லையேல்..."

"அப்படி யாதம்பி அலாவுத்தீன்
அன்னம்மா உனக்குத்தான் இருகொஞ்சம்"

"இனம்மதம் குலம்என்று பாராமல்
இணைந்தீர்கள் என்தனின் வாழ்த்துக்கள்!"

"அகதிகள் ஆகிய எங்களை
ஆசீர் வதித்தீர்கள் நன்றிகள்...!"

"சகதிக்குள் விழாமல் காத்தஉன்
சாரதா மாமியைப் பார்த்துக்க!"

# நெஞ்சை ஊனங்கள் ஆக்குதல் நீதியா?

புத்திகள் வளராத பருவத்தில் தந்தை
போய்விட்டார் மரணித்து... என்தனைப்
பத்தியம் காத்தே வளர்த்தஎன் அன்னை
பாரிச வாதத்தால் படுக்கிறாள்!

இந்தத் துரதிஷ்ட விதிதனைத் தெரிந்து
இனிக்கின்ற வார்த்தைகள் சொல்லியே
தந்திரம் ஆகநீர் என்தனைக் கொஞ்சித்
தன்னோடு அழைத்துவந் தாயேநீர்!

பசியின் கொடுமையால் இங்குநான் தினமும்
படுகின்ற வேதனை புரியுமா?
"பாசத்தோ டுன்னைநான் பார்ப்பேன்" என்றநின்
பாசாங்கை புரியாமல் போயினேன்

"போலியும் புளுகும்தான்" சொன்னவை இன்றுநான்
புரிந்துகொண் டேன்உன்றன் புனிதத்தை
வேலிக்குள் அடைபட்டு வதைகின்ற என்றன்
வேதனை புரிந்தாலும் வேகாது!

விடியுமுன் எழுந்ததும் வீடும்முன் வாசல்கள்
விளக்குதல் - தண்ணீர் கிணற்றினில்
குடிக்கவும் கழுவவும் அள்ளியும் நித்தம்
குட்டுகள் பட்டுநான் துடிக்கின்றேன்

அழுக்குப் பிடவைகள், சட்டிகள், பானைகள்
அத்தனை யும்நானே ஒவ்வொன்றாய்
கழுவியே முடித்ததும்... குசினிக்குள் புகுந்தால்
கணக்கில் அடங்காது வேலைகள்!

சின்னஞ் சிறுசுநான் நித்தமும் உன்னால்
சிக்குண்டு படுகின்ற அவலங்கள்...
கண்களால் வடிக்கின்ற கண்ணீர்கள் இந்தக்
காலத்தில் இதுநீதி ஆகுமோ?

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

எந்தனின் இளமைகள், உரிமைகள் பேணிடும்
இரக்கக் குணங்களே இல்லையா?
"சொந்தப் பிள்ளைபோல் காப்பேன்நான்" என்று
சொல்லிய வார்த்தைகள் மறந்தீரே!

உங்களை காக்கின்ற எங்களின் நெஞ்சை
ஊனங்கள் ஆக்குதல் நீதியா?
எங்களின் இளமைகள் வளங்களை பொசிக்கின்
எதிர்காலம் படைப்பது எவ்வாறு?



# தலைநிமிர்ந்து வாழனும் என் தங்கம்மா!

வாடி வாடி வந்து இங்கே பாரடி ஒண்ட
வம்புக்கார மகனைக் கொஞ்சம் கேளடீ
பாடிப் பாடிப் பெத்தாயேநீ தங்கம்மா - இவன்
படுத்து கின்ற பாட்டைக் கொஞ்சம் பாரடீ
பொண்டாட்டிஎன் கண்மணி புள்ளயப் பெத்த பெண்மணி
புரிஞ்சிக் காம இருக்கிறீயே என்னேநீ?

போற போற பொம்பிளைகளைக் கிட்டுகிறான் அந்தப்
பொம்பிளைகளைப் பார்த்துக் கண்ணை வெட்டுறான்
ஏற இறங்கப் பார்க்கிறான் எட்டிக் கையைப் பிடிக்கிறான்
எனக்கும் உனக்கும் நல்லவனாய் நடிக்கிறான்!

அவனுக் கென்ன நீகொடுத்த செல்லம் அன்னா
ஆட்டம் போட்டு எங்கே போறான் சொல்லும்
கவனக் குறைவாய் இருந்ததால் கண்டபடி வளர்ந்திட்டான்
காலம் கெட்டுக் கிடக்குதடி கவனம்டீ!

நாலு காசு சம்பாதிக்க வக்கில்ல வெள்ளக்கார
நாகரீகம் எடுக்கிறத்தில் குறையில்லே...
தலைகால் எதுவும் தெரியாமல் ததிங்கிணத்தம் போடுகிறான்
தங்க மகனை இங்கே கொஞ்சம் கூப்பிடு!

கல்லு வாடி போட்டுக் கொடுப்பம் கேளடீ கொஞ்சம்
கஷ்டப் பட்டால் காறும் வாங்க முடியும்டீ
நல்ல காலம் பொறக்கும்டீ நமக்கும் நன்மை கிடைக்கும்டீ
நாலு மனுஷன் மதிக்க அவன் வாழுவான்

அவனுக் கொரு கல்யாணத்தையும் முடிக்கணும் அவள்
அன்பும் பண்பும் உள்ளவளாய் இருக்கணும்
தவம் கிடந்து பெற்றஉன் தங்கமகன் சமுகத்துல்
*தலை நிமிர்ந்து வாழட்டும் என் தங்கம்மா!*

பத்துமாதம் சுமந்து பெற்றஎன் தங்கம்மா ஒண்ட
பாட்டி சொன்ன பொண்ணைக் கொஞ்சம் பாரடி
கட்டி வெச்சால் தெரியும்டி கஷ்டம் எல்லாம் புரியும்டீ
கல்லு வாடி போட்டுக் கொடுப்பம் செய்யட்டும் அவனக்
கட்டாருக்குப் போக வேண்டாம் சொல்லடி நம்ம
கண்ணுக்குள் அவன் கிடக்கட் டும்டீ சொல்லடீ!



# முள்முருக்கன் பூக்கள்

ஐம்பொறிகளும் ஊனங்கள் இல்லாது அமைந்தவற்றில்
ஐயம்அறக் கிடைக்கின்ற
தெம்புகளும் திருப்திகளும் அவற்றின் புலன்களுக்கு
திறவுகோலாய் இருந்திடணும்

பொறிகளது புலன்கள் நித்தமும் தம்பணியில்
பொருள்தர இயங்கிடின்
நெறியுடை வாழ்வியல் பயணங்கள் தொடர்பாடலாய்
நேர்த்தியாய் தொடர்ந்துசெலும்!

அறிவுகள் ஆற்றல்கள் ஆளுமைகள்... இன்னபல
அப்புலன்கள் பெற்றிருந்தும்
நெறிவழி தவறிய பயணத்தில் நின்றாடின்
நெஞ்சமே பொறுத்திடாது!

அறிவுகள் ஆற்றல்கள் ஆளுமைகள் விழுமியங்கள்
அத்தனையும் தனதுசுய
செறிவுகளை அடைதற்காய் வரைகின்ற கோலங்களால்
சித்திரங்கள் ஒளிராது!

ஒழுக்கநெறி பண்பாடு ஏனையமன் உரிமைகளை...
ஓம்புதலால் உதவுதலால்...
விழுமியநல் வெளிப்பாடுகள் புலன்களில் இல்லைஎனில்
விடியலுக்கு வழியில்லை!

ஆயதம் மனிதப் பிறவிகளின் நலன்பேணி
ஆறுதல்கள் அளிக்கின்ற
முயற்சிகள் பயணங்கள் தொடுக்கின்ற அர்ப்பணிப்பில்
முன்னேற்றம் பூத்திடணும்!

தன்நிலைகள் அலங்கரிக்கும் முள்முருக்கன் பூக்களாய்
தருமங்களைப் புறம்தள்ளி
என்னதவம் செய்தாலும் போகின்ற போதுபுக
எதுவுமே இருக்காது!

# மனிதங்கள் பூத்து மலர்ந்தால்!

"எந்தன் ஆத்மாவில் இழைந்து உருகி
எழுகின்ற இராகங்கள்... இசைத்துப்பார்!"
என்றுநீர் என்உணர்வை முறுக்கிவிட
எடுக்கிற்ற முனைவுகள் நான்அறிவேன்.

எவ்வண்ணம் இசைப்பதுவாம் துர்நாறும்
இராகத்தை நானிசைத்து உன்னைப்போல்
ஒவ்வாத தாளங்கள் போடுதற்கு
ஒருநாளும் இயலாது எண்ணிக்கொள்!

உன்தன் ஆத்மாவில் உறைந்துள்ள
ஊனங்கள் வளர்க்கின்ற புண்ணுகளை
என்றும் நானறிவேன் அவற்றிலெழும்
இராகங்கள் எனக்குத் தெரியாதா!

தன்னுடைய பிறப்பினதும் தத்துவங்கள்
தன்மைகள் இலட்சியங்கள் தருமங்கள்
இன்னவைதான் என்பதைநீ அறியாமல்
இராகங்கள் பாடியே இசைக்கின்றீர்!

இருமைக்கும் ஆனபல செல்வங்கள்
இருந்தால் அதை மீட்டும்!
பெருமை என்கின்ற பேய்க்குணம்
பொருந்தின் கூடவரும் பொல்லாங்கு!

வறுமைகள் சிறுமைகள் எதுவரினும்
வாழ்வில் பிறர் நிலையில்
பொறாமை கொள்ளுதல் தருமும்
பொறுக்காது உணர்ந் திடணும்!

சீராகப் பொந்துவன வந்து
சேர்ந்து வாழ்வில் சிந்தும்
பேராசை மென்மேலும் கொன்றீர்
பொருந்தியதும் வற்றிப் போம்

பெருமை பொறாமை பேராசைப்
பேய்கள் ஊட்டிவிட்ட விஷநீர்கள்
அருமை ஆனஉன் ஆத்மாவை
அழுக்காக்கி விட்டதை நீர் அறியவில்லை!

இவைகள் இசைக்கின்ற நாற்றங்களின்
இராகத்தை நானும் இசைத்திட்டால்
அவைகள் என்னுடைய ஆத்மாவையும்
அழுக்காக்கி இழிவாரம் ஆக்கிவிடும்!

அந்தநின் அழுங்களை புண்ணுகளை
ஆற்றாத ஆத்மாவைத் துணைகொண்டு
எந்தஓர் இலக்கினையும் அடைதற்கு
இயலாது இமையமோ... வெகுஉயரம்!

புண்ணுகளில் வடிகின்ற ஊனத்தின்
போஷாக்கில் வளர்ந்த அந்தவிஷ
வண்டுகளின் இறக்கைகளில் உன்னோடு
வழிப்பயணம் ஆகாது... இசைக்காதே!

"மனிதம்" என்கின்ற மகத்துவத்தை
மதியாத அறம்பிறழ்ந்த உன்னுடைய
புனிதங்கள் சீர்கெட்டு ஆத்மாவில்
புரையோடும் வடுக்களைநீ எண்ணிப்பார்!

அவற்றினை ஆற்றாது இசைஎழுப்பும்
ஆத்மாவும் புண்ணுகளும் இருக்கும் வரை
எவற்றையும் அடைவதற்கு இயலாது
ஏறவும் இயலாது எண்ணிக்கொள்!

தொடுக்கும் நின்னுடைய பயணத்தில்
தூய்மைகள் மட்டுமே துணைநிற்கும்
வடுக்கள் இல்லாத மனிதங்கள்
வாழ்வில் பூத்து மலர்ந்திட்டால்!

இருமையும் சிறக்கும் அவ்வழியில்
இழையும் இசைகளின் இராகங்களின்
அருமையில் நானும் இலயித்துவர
அன்பே என்னைநீ வென்றிடுவீர்!

# காலங்கள் பதில் சொல்லும் பயணங்கள் தேவை!

தமிழ் என்னும் மொழிமணந்து வீசும்மண்ணில்
தங்களது சுவடுகளைப் பதிக்க எண்ணி
திமிர் கொண்ட பேரினத்தின் பயணம் ஏனோ
திசை மாறி தொன்மைமிகு தமிழனத்தை...

சீண்டிஅறச் சிதைப்பதற்குப் போட்டவித்து
செடிஆகிப் படர்ந்து முள்ளாய் வன்மைமிக்க
தமிழ்மொழியும் ஜீவன்களின் வாழ்வில் தைத்து
தலை முறைக்கேகேடு என எண்ணலானார்!

அன்று முதல் புண்பட்ட தமிழ்இனத்தின்
ஆறாத புரைகள் தனை ஆற்றொணாது
பொன்றியவர் பொய்விட்டார் சுமத்தி விட்ட
புரூட்டஸ்கள் இன்னும்தான் இருந்து பின்னால்

பின்கதவால் எரிதீயில் எண்ணெய் ஊற்றி
பெருநெருப்பாய் ஆக்கியதில் கூதல்காய
எண்ணியதால் வந்தவினை தொடர்ந்து அந்த
எரிகின்ற நெருப்பு இனும் அணையவில்லை

பற்றவைத்த பாபத்தின் விளைவால் அந்தோ
படுகின்ற துயரங்கள் புரிந்தும் அந்தக்
குற்றத்தை மென்மேலும் கூடஇருந்து
குழிபறிக்கும் இலக்குகளில் இன்னும் இன்னும்...

சற்றேனும் தவறாமல் வித்தை காட்டி
சரித்திரத்தின் சுவடுகளைச் சிதைத்து... காணும்
வெற்றியினில் உலா வந்து அரசு ஓச்ச
விழைகின்ற பகை தன்னை என்னே என்போம்!

தொன்மைமிகு தமிழ் மொழியும் மக்கள் தன்னை
தூரத்து இனமாக்கி சீண்டிப்பார்க்கும்
வன்மைமிகு ஜீவன்கள் வளைத்துப்போட்ட
வலையினுக்குள் தங்கத்தமிழ் மொழியும் மக்கள்...

தன்மானம் இழப்பதுவா என்று எண்ணித்
தலைநிமிர்ந்து கோதாவில் இறங்கி இன்னும்
கண்டபலன் எதுவும் இல்லை ஏமாற்றம்தான்...
காலங்கள் பதில் சொல்லும் பயணம்தேவை...!

# தொடருங்கள் பயணத்தை...!

இமயத்தின் சிகரத்தை
எட்டத் துணிகின்ற
இதயங்க ளேசற்று நில்லுங்கள்! - தக்க
சமயத்தில் உங்களை
சந்திக்கக் கிடைத்ததால்
சங்கதி ஒன்றினைச் சொல்கிறேன்!

பாதையில் இழைகின்ற
பள்ளங்கள் மேடுகள்...
பார்த்துநடந்திடப் பயிலணும் - ஒல்லும்
சாதனை படைத்திடச்
சபதங்கள் எடுத்துள்ளீர்...
சத்தியம் வழித்துணை ஆகட்டும்!

ஒழுக்கமும் கல்வியும்
இறைவழி ஒழுகணும்
உழைக்கும் மனப்பாங்கும் இதயத்தில் - நித்தம்
வழுவின்றி வளர்ந்திடின்
வாழ்வியல் மலர்ந்திடும்
வருங்காலம்... உங்களை வாழ்த்திடும்!

கற்பவை கற்றபின்
கற்றதன் வழிதனைக்
காலமெல் லாம்பேணி வாழணும் - உங்கள்
வெற்றியின் சிகரத்தை
வென்றிடும் பயணத்தில்
வெவ்வேறு முரணுகள் ஆகாது!

மதங்களால் இனங்களால்
மனிதங்கள் சிதைவுறும்
மடமைகள் ஒழியணும் இளமையில் - உங்கள்
இதமான பாதையின்
இலக்குகள்... அடைந்திட
இதயங்கள் ஒன்றாகி இலங்கட்டும்!

ஒருவரை ஒருவர்தம்
உள்ளத்தால்... செயல்களால்...
ஓம்பிடும் பண்புகள் ஒளிரணும் - என்றும்
தருமத்தை நிறுத்திமுன்
தளராது... பயணத்தைத்
தொடருங்கள் இமயத்தை வெல்வீர்கள்?



# தேசிய ஒற்றுமை

எல்லைஇலா ஜீவன்களின்
இகவாழ்வு வளங்களுக்காய்
ஒவ்லும்நல் பணிஆற்றும்
உயர்ந்தஒரு தேசத்தை...

பாரங்கள் சுமக்கும்வெறும்
பாடையாய் எண்ணியதால்
சோரங்கள் போய்விட்ட
சுதந்திரங்கள் எத்தனையோ!

தன்னையே அர்ப்பணித்துத்
தாரைகள் வார்க்கின்ற
பொன்னாம்இத் தேசத்தைப்
போஷிக்கத் தவறிவிட்டால்...

'தேசியம்' என்கின்ற
தீபத்தின் பிரகாசம்
தூசிகள் படிந்துவெகு
தூரத்தே மறுகிவிடும்...!

'தாய்'என்னும் விழுமியத்தின்
தன்மைகளை மதியாமல்
சேய்கள்எலாம் திசைமாறின்
சித்திர வதைகள்தான்!

வாழ்வளிக்கும் தேசத்தை
வடிவமைக்கும் ஜீவன்களும்
தாழ்நிலையில் இறங்கிவிட்டால்
தருமங்கள் செத்துவிடும்...!

இனம்வேறு... மதம்வேறு...
இன்னபல கூறுகளாய்
மனுநீதிகள் ஆகிவிட்டால்
மனிதங்கள் ஒளிராது!

ஒருவரை மற்றொருவர்
ஓம்புகின்ற மனிதங்கள்
கருவானால் ஒற்றுமையும்
கனிந்துருகும் தேசியமும்!

சிந்திக்கத் தவறுகின்ற
ஜீவன்களே எண்ணுங்கள்!
முந்தித் தவம்கிடந்து
முக்கியது எதற்காக?



# தனித்துவங்கள் தழல்கின்றன!

அறம்ஒளிரும் வாழ்வியலுக்கான அடிப்படை ஆதாரங்கள்
அத்தனையும் மனிதருக்கு அமைந்திடனும்!
கறைபடிந்த ஏதேதோ போலிகளை வரைவதால்தான்
கவலைகளும் வடிக்கின்ற கண்ணீரும்!

இம்மண்வாழ் மக்களினம் இதுகாலும் அனுபவித்த
இன்னல்கள் சோதனைகள்... எத்தனையோ!
காலங்கள் பலகடந்தும் சூல்கொண்ட காரிருள்கள்
கலைகின்ற அறிகுறிகள்... தெளிவில்லை!

நிரந்தரமான குடியிருப்பு தாய்மொழி உணவுஉடை
நித்தமும் பேணுகின்ற மதம்கலாசாரம்
சீர்ஒளிர் கல்விநெறி சுகாதாரம் தொழில்வளம்
சிறப்பான வாழ்வியலின் கொள்கைகள்...

இல்லாததன் காரணத்தால் மக்கள்தம் இதயங்கள்
இலக்கின்றி பிறழ்வுண்டு இழிகின்றன...
எல்லோர்க்கும் பொதுவான சமதருமக் கொள்கைகள்
எடுத்தாளத் தவறியதால்... வந்தவினை!

இப்படியே கரைந்திட்ட பாதைகளில் பயணித்து
இதயங்கள் குழம்பிப்போய்... இதன் வீச்சால்
கப்பியறும் துரதிஷ்டஅவலங்கள் ஒவ்வொன்றையும்
கழுவுவதற்கு புதவழிகள் கண்டிடணும்!

அந்நியநம் தேசத்தார் கண்பட்ட எம்இலங்கை
அழகியஇக் கடல்சூழ் தீவுதனின்...
சந்நிதியில்... நித்தமும் அன்னவர்கள் படைத்திட்ட
சரித்திரங்கள் இன்னமும் சாகவில்லை!

வரலாற்றை சித்தரித்து கோலோச்சிய அன்னவர்கள்
வசமிருந்து வாதாடிப் போராடி
பெருமையுடன் பெற்றெடுத்த சுதந்திரங்கள் வாழ்வியலில்
பிரகாசம் முறையாக ஒளிரவில்லை!

நம்பியதால் வந்தவினை இன்னுமவை எல்லீர்க்கும்
நடைமெலியும் நோய்களாய் தொற்றியன...
எம்மவர்கள் அனைவரையும் ஏற்றிவிட்டு தந்திரமாய்
எத்தர்கள் ஏணிகளை எடுத்தார்கள்!

இடறிக்கால் விழுந்ததனால் சிந்தியன இரத்தங்கள்...
இவற்றால் படிந்தகறைச் சுவடுகளின்
தடயங்கள் அழியவில்லை புண்ணாகிப் புரையோடி
தனித்துவங்கள் எரிந்து தழல்கின்றன...!

இத்தீவில் வாழுகின்ற ஒவ்வொரு ஜீவன்களும்
இதயங்கள் பரஸ்பரம் ஒன்றிணைந்து
சத்தியத்தை முன்னெடுத்து சமதர்மம் பூப்பதற்கு
சபதங்கள் எடுத்திடணும் சளைக்காமல்!

# வாழ்வியல் ஒளிர்வதற்கு!

எம்இலங்கை தீவகத்து மக்களது வாழ்வியல்கள்
எப்போதும் சிறப்பாக ஒளிர்வதற்கு
செம்மையுறு சமதரும வழிநெறிகள் எக்காலும்
சிறப்பாக ஒளிர்ந்து இலங்கிடணும்!

சிங்களமும் செந்தமிழும் தேசியநம் மொழிகள்எனும்
சித்திரத்தை நித்தியமாய் வலுவாக்கி
எங்கெங்கும் இருமொழியும் சமநிலையில் இலங்குதற்கு
ஏற்புடைய விதிமுறைகள் இருந்திடணும்!

சர்வதேச மொழியான ஆங்கிலம் இவைகளுடன்
சார்ந்துவள இணைமொழியாய் இழைந்து
நிருவாகத் தேவைகளில் பங்களிக்கும் பாத்திரத்தில்
நிரந்தரமாய் இலங்குகின்ற நிலைவேண்டும்!

இம்மூன்று மொழிகளையும் எல்லீரும் கற்பதற்கு
இத்தீவின் ஒவ்வொரு பிரஜைக்கும்
செம்மையான ஒழுங்குகள் வலுவாகச் செய்துநிதம்
செயற்படின் நலன்பயக்கும் எக்காலும்!

சமயங்கள் சார்ந்துஒளிர் அதனதன் மொழிகளை
சார்ந்தவர்கள் சிறப்பாகக் கற்பதற்கும்
சமயம்சார் தலங்களில் வழிவகை செய்திடணும்
சமயநெறி சிறப்பாக ஒளிர்வதற்கு!

பௌத்தம் இந்துநல் இஸ்லாம் கிறிஸ்துவம்...
பரஸ்பரம் மதங்கள் சார்ந்தவரின்
அத்தனை உரிமைகளும் சிறப்பாப் பேணிவர
அனைவருக்கும் எக்காலும் இருந்திடணும்!

கல்வி சுகாதாரம் தொழில்வளம்... வாழ்வியலின்
காலங்கள் ஒளிர்வதற்கு திருப்தியான
செல்நெறிகள் எதிர்கால சந்ததிகள் தேடலுக்கு
சிறப்பான வரைவுகள் இலங்கிடணும்

அரசாங்க ஒதுக்கீடுகள் பதவிகள் உதவிகள்...
அத்தனையும் விகிதாசார சமநிலையின்
திரல்களுக்கு அமைவான வழுவற்ற வரைவுகளால்
நிரந்தர வழிநெறிகள்... இலங்கிடணும்

இவ்விதம் ஆனநெறி வழிப்பாதைப் பயணத்தில்
இலக்குகளை முறையாக அடைவதற்கு
செவ்வனே சிந்தித்து அதிகாரம் மிக்கவர்கள்
செயற்படுதல் நித்தமும் அவசியம்!

மொழிகள் மதங்கள் பிரதேசங்களால் மக்களது
மனிதத்தைச் சிதைக்கின்ற மடமைகளின்
வழிபரபை ஒழிக்கின்ற விதிமுறைகள் வலுவாகி
வாழ்வியல் ஒளிர்வதற்கு வழிவேண்டும்!

அரசுஅறம் பிறழாது சமதருமம் மலர்கின்ற
ஆட்சிகள் எக்காலும் அரசோச்சின்
மறம்கருகி எல்லீரும் ஒற்றுமையாய் வாழ்கின்ற
மனப்பாங்கு எக்காலும் மணந்திடனும்!

# குமுறல்

"சொர்க்கம்" என்ற
வேத சுருதியினை
மீட்டும்
வர்க்க நாதம்
ஒன்று
வானில் கிளம்பிற்று!

இதய வீணையை
இசைத்து ஓர்
ஏழை
நரகில் மிதந்து
அழுந்தி
நாதத்தை நோக்குகிறான்

எட்டாத தூரம்
இருந்து மறுகும்
"சொர்க்கம்"
கிட்டாதோ! என்று
கிளர்ந்து
வானை உடைக்கிறான்...!

# தருமங்கள் பூத்திடணும்

பிள்ளைகளைப் பெற்று வளர்த்து சான்றோராய்
பெருமையுடன் ஒளிர்வதற்கு
அல்லும் பகலுமாய்த் தத்தமது வாழ்வியலை
அர்ப்பணித்த அன்னை தந்தை!

கல்விகளை அறிவுகளைக் கற்பித்து இமயத்தைக்
கடந்துசென்று விடியலுக்காய்
ஒல்லும் வகைகளில் தங்களையே தாரைவார்த்து
ஒளிதனை ஏற்றி ஆசான்கள்!

மனம்உடல் நோய்களால் வதைந்து நலிந்தபோன
மனிதர்தம் ஜீவனுக்கு
இனம்மதம் நோக்காது சிகிச்சைகள் அளித்துநிதம்
இலங்கிய வைத்தியர்கள்!

காலநேரம் பாராமல் கஷ்டங்கள் அனுபவித்து
கனவுகளை நனவாக்க
கூலிக்காய் தொழில்செய்து மன்னுயிரையும் பேணிநின்ற
கூலிவேலைத் தொழிலாளிகள்!

சமூகசமய இலக்கியம்... பணிகளில் மக்கள்தம்
சந்ததிகளின் இருளகற்றும்
தமதுதுறை சார்ந்தநல மேம்பாட்டுப் பயணத்தில்
தனைவார்த்த திலகங்கள்!

மக்களுக்காய் சேவைசெய்யும் மற்றும்பல பதவிகளில்
மகத்தான பணிகளாற்றி
திக்குகள் தோறும்தனை அர்ப்பணித்து ஒய்வுபெற்ற
தியாகிகள்... நற்சீலர்கள்!

'பாபங்களைச் செய்ததன் விளைவுதான்' என்றுநிதம்
பலராலும் ஒதுக்கப்படுகின்ற
சாபங்கள் பெற்றவர்போல் சந்திகளில் சாலைகளில்
சீரழியும் பரதேசிகள்!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

இன்னநம் ஜீவன்கள் தங்களது பயணத்தில்
எதிர்கொண்ட சவால்கள்...
அன்னவர்கள் முதுமையினால் நடைமெலிந்து சமூகத்தில்
அவலங்கள் படுவதுவா?

எந்தஒரு மனிதருமே ஜீரணித்தல் ஆகாது
எவர்தம் இதயத்திலும்
அந்தமுதிர் படைப்புகளைப் பேணுகின்ற தருமங்கள்
அகலாது பூத்திடணும்!



# இரத்த நரம்புகள்

சுற்றிவர அலைபாடும் நீலவண்ணக் கடல்கள்
சுழியோடி விளையாடும் மீனினங்கள்
வற்றாத வளைநதிகள் வயல்கள் மான்துள்ளும்
வனங்கள் மயில்கள் மலைகள்...

கல்விசார் மேதைகள் இருப்பிற்கும் குறைவில்லை
கலைஞர்கள் எழுத்தாளர்கள் என்றுஒளிர்
செல்நெறி இலக்கியச் செம்மல்கள் பலரும்நம்
செறிந்தவள எழில்மிக்க தீவுதான்...!

மக்களது சமூகநல அரசியல் பயணத்தில்
மறுமலர்ச்சி காண்பதற்கு அர்ப்பணிக்கும்
தக்கவர்கள் இருப்பிற்கும் குறைவில்லை முன்னோடி
தலைவர்கள் தொண்டர்கள் எத்தனையோ!

மதங்கள் கலாசாரம் சார்ந்த ஆன்மீக
மகான்கள் நிகரற்று வாழுகின்ற
இதமான இத்தீவில் வளம்பல பொலிந்து
இலங்கிட உழைக்கின்ற இதயங்கள்...

இவ்வன்ன வளங்கள் பலங்கள் இலங்கியும்
இடையிடையே கறைபடிந்த இதயங்கள்...
ஒவ்வாத எண்ணங்கள் இலக்குகள் வாழ்வியலை
ஒடிக்கின்ற பிற்போக்கும் பயணங்கள்...!

இத்தீவு பெற்றுள்ள பாக்கியங்கள் எத்தனையோ
இருந்தாலும் பேணுவதில் பின்தங்கல்
சத்தியம்... பயணங்கள்... திசைமாறும் காரணத்தால்
சரித்திரம் பிறழ்ந்து சிதைகிறது!

எத்தனை மொழிகள் மதங்கள் கலாசாரம்
இழைந்தாலும் அன்னவை சார்ந்த
அத்தனை இனங்களும் இத்தீவின் ஜீவன்களே
அர்த்தம் புரிந்திடணும் எல்லீரும்!

கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின்

இனவாதம் மொழிவாதம் மதவாதம் அதிகாரம்
இன்னபல நெருப்புகள் இத்தீவில்
கனவாய் எரிகின்ற கறுமத்தால் மனிதங்கள்
கண்ணீர் வடிக்கின்ற கோலங்கள்...

இந்துமதம் புத்தமதம் இஸ்லாம் கிறிஸ்துவம்
இவைசார்ந்த சமூகத்தில் மக்கள்
எந்தஒரு கணப்பொழுதும் இதயங்கள் பிறழாது
எறும்புகளாய் உழைத்திடணும் எக்காலும்!

இவ்வண்ணம் உழைக்கின்ற மனிதங்கள் அத்தனையும்
இத்தீவின் இரத்த நரம்புகளே!
செவ்வைஒளிர் இவர்களது உரிமைகள் இருளாகின்
சிவந்தநிறம் ஆகிவிடும் இத்தீவு!

ஆளுகின்ற அரசுகளும் இதைஎண்ணி அறம்பேணும்
ஆட்சிதனை தொடர்ந்திடணும்! இதற்காக
தோள்கள் கொடுக்கின்ற ஜீவன்களும் அர்ப்பணிப்பின்
தோணிகளும் சீராகப் பயணிக்கும்!



# இலங்கை சிறீலங்கா ஈழம்...

இலங்கை சிறீலங்கா ஈழம்... என்று
இக்கடல்சூழ் தீவினுக்கு
இலங்கிடும் பெயர்கள்சில சிங்கம்
இழைகின்ற கொடி ஒன்று!

இக்கொடி நிழல்தனில் வாழ்கின்ற
இத்தீவைப் பேணிவரும்
மக்கள்தம் வாழ்வியல் உரிமையுடன்
மகிழ்ந்து வாழ்ந்திடணும்

இருந்தவர் வந்தவர்... என்கின்ற
இவர்களது பூர்வீக
வரலாற்றுப் பதிவுகளை இரைமீட்டி
வாழ்வதற்கும் மேலாக...

இக்கால... எதிர்கால... சந்ததியை
இலக்காக கொண்டுஎலா
மக்களது செல்நெறி வாழ்வியலை
மலர்ந்திடச் செய்திடணும்

மதங்களால் மொழிகளால் பிரதேசங்களால்
மனிதங்கள் கூறாதல்
இதம்விழையும் இத்தீவின் வாழ்வியலை
இழிவாரம் ஆக்கிவிடும்!

ஒவ்வொரு ஜீவன்களும் இதைஎண்ணி
ஒருமனதாய் வாழ்வியலை
செவ்வையாய்க் கொண்டுசெல்லும் பக்குவத்தில்
செல்நெறிகள் பேணிடணும்

மக்கள்தம் செல்நெறிகள் பிறழாது
மார்க்கம் காப்பதற்கு
எக்காலும் அறம்காக்கும் அரசுகள்
இத்தீவில் இலங்கிடணும்

இத்தீவின் வளத்திற்காய் உழைக்கின்ற
இரத்த நரம்புகளின்
அத்தனை ஜீவன்களும் இத்தீவின்
அசையாத உருமங்கள்!

அந்நியர்தம் துப்பாக்கி பீரங்கிகள்...
அரசுகளை வெற்றிகொண்டு
புண்ணியஇத் தீவுதனை மீட்டெடுத்து
புகழ்பூத்த இதயங்கள்!

பாரதத்தின் சுதந்திர விடுதலைக்காய்
பாடுபட்ட சாத்வீகப்
போராட்டக் களம்கண்ட காந்திமகான்
பலியான கோரம்போல்...

இத்தீவை சிறைமீட்டு வெற்றிகண்ட
இனங்களது ஜீவன்களின்
மத்தியிலும் உருவாகின்... வாழ்வியல் தம்
மார்க்கம் பிழைத்துவிடும்!

மார்க்கம் பிறழின் அரசுடன்
மக்களும் நிலை இழந்து...
சீர்கள் குலைந்து... இத்தீவின்
சிறப்புக்கள் கெட்டுவிடும்!

தங்களது அர்ப்பணிப்பில் பிரசவித்த
தாயகமாம் இத்தீவில்
கங்குல்கள் சூழவரின் விடியலுக்காய்
களம்காணத் தயங்கார்கள்!

களப்போர் கண்டுவரும் நாடுகளின்
கண்ணீர் வரலாற்றில்
இழப்புக்கள் எத்தனையோ... இத்தீவின்
இறைமைகளும் குழம்பிவிடும்!

இக்குற்றம் அறம்பிறழ்ந்து அரசோச்சி
இத்தீவை ஆளுகின்ற
தக்கார் தகவிலர் என்போரின்
தலைகளில்தான் வந்துவிழும்

# துறைமுகம் பூத்த சம்மாந்துறை

எங்கள்சம் மாந்துறை மணிபதி யேஎங்கள்
எல்லோர்தம் உயிர்காக்கும் தாயகமே!
பொங்கும்நின் பாசத்தைப் போஷித்து வாழ்ந்திடப்
பொன்னான வார்த்தைகள் அருளுவீரே!

சம்மாந்து றைஎன்னும் நாமத்துள் பூத்தநின்
சரித்திரம் பூர்வீகம் சுவடுகளை
எம்மாத்தி ரம்புகழ்ந் தாலும்நின் அருமைகள்
இம்மையும் மறுமையும் இலங்கிடுமே!

பட்டிப்ப ளையாற்றில் சம்மான்ப டகுகள்
பண்டங்கள் ஏற்றிஇ றக்கியதால்
சூட்டின ரோபெயர் சூடினை யோமுடி
சம்மாந்து றைஅர சாகினையோ!

வளைந்து நெழிந்தோடும் ஆறுகள் நெற்கதிர்
வயல்கள் பரந்திட்ட நிலவளமும்
விளைந்து பொலிந்திடும் தானியங் கள்தந்து
வறுமைகள் போக்கும்நின் கொடைவளமும்...

மாபலா வாழைகள் கனிதரும் தெங்குகள்
மாருதம் பாடும்நல் தோப்புகளும்
தீபனங் கள்தந்து உயிர்களை வாழ்விக்கும்
தியாகத்தின் பண்பேஎம் தாயகமே!


பால்தரும் பசுக்களும் தயிர்தரும் மேதிகள்
பல்வகை மீன்துள்ளும் ஆறுகளில்
செல்வங்க ளைப்பெற்ற தாயக மேநின்றன்
சேவைகள் என்னென்று சொல்லுவதாம்!

கல்வியும் ஞானமும் கற்றுத்த ருகின்ற
கல்லூரி பள்ளிகள் எத்தனையோ!
ஒல்லும்இ லக்கியம் கலைகள் ஒளிர்கின்ற
ஒப்பற்ற தன்மைகள் எத்தனையோ!

இஸ்லாம்நல் இந்துகி றீஸ்துவ மக்கள்தம்
இன்பத்த மிழ்கொஞ்சும் குடைநிழலில்
விஸ்வாசத் துடனொன்றி வாழ்ந்திட வழிசெய்யும்
விழுமிய பண்பினை என்னசொல்வோம்!

ஏழைப ணக்காரர் உயர்ந்தவர் தாழ்ந்தவர்
என்கின்ற மடமையின் சிறுமைகளை
பழையம ரபுகள் ஆக்கிளம் பாசங்கள்
பாழாகிப் போகாமல் காத்திடணும்!

ஒருவரை ஒருவர்தம் பேணியே வாழ்ந்திடும்
ஒப்பற்ற பண்புகள் எப்பவுமே
இருமையும் ஒளிந்துநல் அருமைகள் இலங்கிட
இறைஞ்சுகின் றோம்சம்மாந் துறைஇழையே!



**கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் பற்றி...**

நான் பிறந்து வாழ்ந்து திருமணமும் செய்துகொண்ட மண்ணாகிய சம்மாந்துறை எனும் பதியில் பிறந்து வாழுகின்ற கவிஞரும், எழுத்தாளரும், கலைஞரும், கல்விமானுமாகிய கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் அவர்களைப் பரிபூரணமாக அறிவேன் நான்.

இவர் கல்வி கற்கின்ற இளமைக்காலத்தில் இருந்தே கவிதைகள், நாடகங்கள், கட்டுரைகள், எழுதுவதில் ஆற்றல்மிக்கவராக இருந்தார்.

இவர் தனது தாய்மொழியாகிய தமிழிலும், தமிழ் மொழியை தாய்மொழியாகக் கொண்டு இலங்கும் சிறுபான்மை மக்களின் வாழ்வியல் தொடர்பான உரிமைகளிலும் மிகவும் பற்றுக் கொண்டவராகவும் இவற்றின் மேம்பாடுகளுக்குப் பணிகள் ஆற்றுபவராகவும் இயங்கினார்.

1956ஆம் ஆண்டு உதயமாகிய 'கலாபிவிருத்திக் கழகம்' எனும் அமைப்பு 1958ஆம் ஆண்டு காலஞ்சென்ற கலைஞர் எம்.எம். இஸ்மாயீல் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற 'தமிழ் மொழி உரிமை' சாத்வீக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இவரும் பங்குபற்றி இருந்தமை தாய் மொழி தமிழில் இவருக்கு இருந்த பற்றுதலை எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.

இவ்வாறு காத்திரமான பல சாதனைகளைப் புரிந்த பிரஸ்தாப 'கலாபிவிருத்திக் கழகம்' எனும் அமைப்பில் நானும் ஒரு முக்கியஸ்தவராகவும், துணைத் தலைவராகவும் பணிகள் ஆற்றி இயங்கினேன்.

இந்தக் கழகத்தைத் தொடர்ந்து இன்னும் பல கலை - இலக்கிய - சமூகப் பணிகளை இலட்சியங்களாக் கொண்ட பல அமைப்புக்களை இவர் ஸ்தாபித்தும் இயங்கனார்.

இப்போது பிரதேச செயலக கலை கலாசார பிரிவுடன் இணைந்து பணிகளாற்றிக் கொண்டு இருக்கிறார். இந்தவகையில் மாகாண அரசுடன் சார்ந்த 'பிரதேச செயலக கலை இலக்கிய கலாசாரப் பேரவை', மத்திய அரசுடன் சார்ந்த பிரதேச செயலக கலாசார அதிகார சபை ஆகியவற்றின் துணைத் தலைவராக

இயங்கி இன்றைய - எதிர்கால சந்ததியினரின் கலை இலக்கிய கலாசார... மேம்பாடுகளுக்காகப் பணிகளாற்றிக் கொண்டு இலங்குகிறார்.

ஆசிரியராக நியமனம் பெற்று முதலாம்தர அதிபராகப் பணிகளாற்றி கல்வி கற்பித்தல் துறைகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வந்த இவர் தனது கலை இலக்கியம் தொடர்பான சாதனைகளுக்காக பிரதேச மட்டத்தில் - மாவட்ட மட்டத்தில் - மாகாண மட்டத்தில் - தேசிய மட்டத்தில் பல அரச விருதுகளையும் பெற்று இருக்கிறார்.

இற்றைக்குப் பல வருடங்களுக்கு முதல் சம்மாந்துறை மண்ணில் பிறந்து வாழ்ந்து திருமணம் செய்து கொண்டிருந்த நான் இப்போது கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் பிறந்த மண் பதியினது நிகழ்வுகளின் பதிவுகளும், சமய கலாசார தொடர்புகளும் இன்னும் என் இதயத்தில் இழைந்து கொண்டே இருக்கின்றன.

இந்த வகையில் என்றும் என் இதயத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் அவர்களது 'சம்மாந்துறை பிரதேச செயலக கலாசார அதிகாரசபை' அமைப்பினால் வெளியிடப்படும் 'இரத்த நரம்புகள்' எனும் பெயரினாலான கவிதைத் தொகுதியில் இவர் பற்றிய தகவல்களின் சுருக்கத்தை எழுதி வெளிப்படுத்த கிடைத்தமையை இட்டு எனது நன்றி இதயங்கள்.

**வாசக ஆய்வாளர் எஸ்.எஸ். மணியம்**
கல்முனை

கலாபூஷணம் மாறன் - யூ ஸெயின்
தலைமையில்
சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம் அனுசரணையில் இயங்கும்
'தேசிய கலை இலக்கிய தேனகம்"

# பூத்த வெளியீடுகள்

- இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்-ஒன்று) 1995
  (பாடத்திட்டத்குரிய தமிழ் சங்ககாலப் பாடல்களின்
  பொழிப்புரைத் தொகுப்பு)
  கவிஞர் மாறன் யூ. ஸெயின்
- இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்-இரண்டு) 1996
  (பாடத்திட்டத்குரிய தமிழ் சங்ககால பாடல்களின்
  பொழிப்புரைத் தொகுப்பு)
  கவிஞர் மாறன் யூ. ஸெயின்
- றோசாச் செய்கை 2004
  (விவசாயம் தொடர்பான விளக்கம்)
  கலைஞர் சஞ்சீவி சிவகுமார் - கலைஞர் முஜிபுர் றகீப்
- அத்தனையும் முத்துக்கள் 2006
  (கவிதைத் தொகுதி)
  கலாபூஷணம் ஏ.ஸி.இஸ்மாலெவ்வை
- புள்ளியைத் தேடும் புள்ளிமான் 2007
  (கவிதைத் தொகுதி)
  கவிஞினி எஸ்.நுஹா
- கூன் நிமிர்கிறது 2009
  (கவிதைத் தொகுதி)
  கவிஞர் ஈழத் தொண்டன் யூ.எல்.எம். இஸ்மாயில்
- சொர்க்கபுரிச் சங்கதி 2016
  (சிறுகதைத் தொகுதி)
  எழுத்தாளர் எம்.எம். நௌஷாத்
- கடையில் பூத்த கவிதைகள் 2016
  (கவிதைத் தொகுதி)
  கலாபூஷணம் ஏ. அஸீஸ்

*சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்க*

## தேசிய கலை இலக்கியத் தேனகம்

சம்மாந்துறைப் பிரதேசம்வாழ் மக்களிடையே கலை இலக்கிய ஆற்றல்கள் பல வடிவங்களில் பாரம்பரியமாகவே இழைந்து வருகின்றன. உழைக்கின்றபோதும் ஓய்வுகள் எடுத்து உலாவுகின்றபோதும் இனிய கவிகள்பாடி இன்புறுவதும், காவியங்கள் பாடி இதயம் பூரிப்பதும் மக்களிடையே இயல்பான சம்பவங்கள்.

இந்த கவிப்பாடல்களை அவ்வப்போது திருப்தியான வகையில் ஆவணப்படுத்தி வந்ததாக இல்லை. இதனால் எழுத்தாளர் கவிஞர்களின் இலக்கியப்படைப்புக்களும் துருவ நட்சத்திரங்களாகவே இலங்கின.

இந்தச் சூழ்நிலையில் கல்லோயாக்காவியம், அறவழிக்கீதம், உரைமலர், மழையும் துளியும், அல் - குர்ஆனியல், இஸ்லாமிய சிந்தனை, இகம் சிந்தும் பனித்துளி, ஈழத்தின் இன்னுமொரு மூலை... என்று இன்னோரன்ன நூல்கள் வெளியாகி இருந்தன - காலத்திற்குக்காலம் வெளியாகிக் கொண்டும் இருக்கின்றன. இந்த முயற்சிகள் இன்றைய - எதிர்கால சந்ததியினரின் தேடல்களுக்குப் போதுமானதாக இல்லை.

இந்த வரட்சியினைக் கருத்திற்கொண்டுதான் தொகுப்புக்கள் - நூல்களை வெளியிடும் இலட்சியத்தைக் கருத்திற்கொண்டு கலாபூஷணம் மாறன் - யூ. ஸெயின் தலைமையில் இயங்கும் சம்மாந்துறை தமிழ் எழுத்தாளர் சங்கம் அனுசரணையில் 1994 ஆம் ஆண்டு "தேசிய கலை இலக்கியத் தேனகம்" உதயமாகி இருந்தது.

இந்த இலக்கியத் தேனகம் 1994 முதல் இனிக்கும் தமிழ் இலக்கியம் (பாகம்-1, பாகம்-2) முதல் "கடையில் பூத்த கவிதைகள்" எனும் தொகுதிவரை எட்டு நூல்களை வெளியீடு செய்து இருந்தது. இதைத்தொடர்ந்து இன்னும் பல நூல்களையும் விரைவில் வெளியீடு செய்யவும் இருக்கிறது.

இன்றைய - எதிர்கால சந்ததியினரின் தேடல்களுக்குப் பயன் தரவல்ல இந்த ஆவணப்பணிகள் தொடர்ந்தும் பிரகாசிக்க எல்லீரது ஒத்துழைப்புக்களும் இலக்கியத் தேனகத்தின் அர்ப்பணிப்பிற்கு அவசியமாக இருக்கின்றன.

**கலாபூஷணம் ஏ.ஸி. இஸ்மாலெவ்வை**
பணிப்பாளர்
தேசிய கலை இலக்கியத் தேனகம்

STC Printers Str.